

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

வருடாந்த அறிக்கை 2022



இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்





உள்ளடக்கம்

தலைவரின் செய்தி	79
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்	81
பணிப்பாளர் சபை	82
சிரேஷ்ட உத்தியோகத்தர்கள்	82
சந்தைப்படுத்தல்	83
மக்கள் தொடர்பு	106
உள்நாட்டு ஊடகங்கள்	113
நிகழ்வுகள்	115
விளப்பரப்படுத்தல்	121
2022ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள்	129
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2022	229

தலைவரின் செய்தி



2023ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையில் இலங்கையின் ஒளிமயமான அற்புத பயணத்தில் வெளிப்படக்கூடிய கதையை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் உண்மையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தக் கதையின்கூற்று முன்னேற்றத்தின் ஒரு கட்டமாகக் குறிப்பிடப்படாமல், எதிர்த்தெறிப்பு, நம்பிக்கைவாதம் மற்றும் சவால்களை மீறிச்செல்லக்கூடிய ஒன்றிணைந்த தைரியம் போன்ற நூல் இழைகளால் நெய்யப்பட்டுள்ளது. நீங்களும் நானும் இந்த இந்த வருடாந்த அறிக்கையை ஆராய்வோமானால், எமது சாதனைகளின் வரிசைகளைக் காண முடிவதுடன், எமது முன்னோக்கிய பாதையை வடிவமைக்கக் கூடிய நம்பிக்கைக்குரிய முன்னேற்றங்களை ஆராய முடியும்.

வருடத்தின் முற்பகுதியில் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்த நிலையில், எமது நிறுவனத்தின் திறமையான கையாளுகை காரணமாக ஸ்திரத்தன்மையை விரைவில் மீட்டெடுக்க முடிந்திருப்பதுடன், இந்த முயற்சிகளின் பலனங்கள் தற்பொழுது சாட்சியாக அமைகின்றன. 2023 செப்டெம்பர் மாதம் வரையில் 1 மில்லியன் விருந்தினர்கள் மீண்டும் வருகை தந்துள்ளார்கள் என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைவதுடன், இவ்வருட இறுதிக்குள் 1.25 மில்லியன் விருந்தினர்களின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாத்துறை மீட்சிபெற்றுவருவதற்கான தெளிவான சமிக்ஞையாக இது அமையும் அதேநேரம், இது தொற்றுநோய் சூழலுக்கு முன்னர் இருந்த நிலைமையை அடைவதற்கான ஒரு படியாகும்.

பொருளாதார ரீதியான நிச்சயமற்ற தன்மையிலிருந்து செப்டெம்பர் மாதத்தில் ஒரு மில்லியனாவது சுற்றுலாப் பயணியை வரவேற்கும் நிகழ்வு வரையிலான பயணமானது எமது சுற்றுலாத்துறை எதிர்விசையுடன் செயற்பட்டுள்ளது என்பதைப் பிரதிபலிக்கிறது. புதிய விமானசேவைகள், மேம்படுத்தப்பட்ட இணைப்புக்கள் மற்றும் அதிகரிக்கப்பட்ட கடல் சுற்றுப்பயணங்களுக்கான அழைப்புக்கள் என்பன இந்த சாதகமான இயங்குவிசையில் முக்கியமான பங்காற்றியிருப்பதுடன், எமது நெகிழ்வுத்திறன் மற்றும் சவால்களிலிருந்து மீண்டுவருவதற்கான திறன் என்பவற்றை வெளிக்காட்டுகின்றன.

தற்பொழுது முன்னெடுக்கப்படும் “செக்-இன்” (பயண ஆயத்தம்) முயற்சியானது பிரசாரங்களுக்கு அப்பாற்பட்டது என்பதுடன், அவை எமது கூட்டு நம்பிக்கை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியின் உறுதிமொழியாகும். இந்தப் பிரச்சாரங்கள் 2024 இல் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் 360 பாகை “கருப்பொருள்” பிரசாரத்துக்கு வழிவகுப்பதுடன், நிலைத்தன்மையின் கொண்டாட்டமாகவும் அமைகிறது. அது மாத்திரமன்றி இது பிரதான சந்தைகளிலிருந்து அதிகமான விருந்தினர்களுக்கான அழைப்பாகும்.

இலங்கையின் தனித்துவமான சொத்துக்களை வலியுறுத்தி, மீள் வர்த்தகநாமப்படுத்தல் முயற்சிகள் மூலம் அமைச்சும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமும் நாட்டுக்கு வலுவான வர்த்தகநாமத்தை உருவாக்கி வருகின்றன. தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் பிரசாரங்கள் மற்றும் புத்தாக்கங்களின் அறிமுகம் என்பன இலங்கையைப் போட்டித் தன்மையான நிலையில் பேணுவதற்கு உதவுகின்றன. நமது தேசிய விமான சேவை நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ உலகில் உள்ள பல்வேறு நகரங்கள் மற்றும் முக்கிய இடங்களை இணைக்கும் வகையில், அதன் வழித்தடங்களை விஸ்தரிப்பதற்குத் தயாராகி வருகிறது.

எமது அடிப்படைச் சந்தைகளாக விளங்கும் இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், ர்யா மற்றும் சீனா போன்றவை தொடர்ச்சியாக விரிவடைந்து வருகின்றன. இதன் அடிப்படையில் எமது வருடாந்த இலக்கான 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் என்ற இலக்கையும் மீறிச் செல்ல முடியும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும். 2024ஆம் ஆண்டு 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவேற்க முடியும் என்ற எமது இலக்குத் தொடர்பில் நாம் உத்வேகம் அமைந்திருப்பதுடன், இது தொற்றுநோய் சூழலுக்கு முன்னர் 2018ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலைமைக்கு மீண்டும் திரும்புவதாக அமையும்

எமது பார்வையை அடிவானத்தை நோக்கிச் செலுத்துவோமாயின், நமது அபிலாசைகள் மிகவும் துடிப்பான சூரிய அஸ்தமனத்தின் சாயல்களில் வரையப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை மூலம் இலங்கை 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டத் தயாராக உள்ளது. இது செழுமையான பொக்கிஷமாகும், எமது நாட்டிற்கு இது உயர்ந்த வருவாயாக அமையும்.

இறுதியாக, 2023 இல் இலங்கையின் சுற்றுலாத்துறையின் வெற்றிக்குப் பங்களித்த எமது பங்குதாரர்கள் மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தரப்பினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஒன்றாக இணைந்து நாம் வெறுமனே மீண்டும் கட்டியெழுப்பவில்லை, மிகவும் மயக்கும் வண்ணங்களில் வரையப்பட்ட எதிர்காலத்தை ஒன்றிணைந்து உருவாக்குகிறோம். இலங்கையின் உற்சாகமாக விளங்கும் அழகு மற்றும் காலமற்ற வளர்ச்சியால் ஈர்க்கப்பட்டு நாம் அனைவரும் கரங்கோர்த்துத் தொடர்வோம்.

அன்பான வாழ்த்துகள்,

திரு.சாலக டி.கஜபாகு - தலைவர், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்



இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தின் 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பணியகம் தற்பொழுது கௌரவ அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களின் விடயப்பரப்பின் கீழ் வரும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஓர் நிறுவனமாக இயங்கி வருகிறது.

இலங்கையை உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சிறந்த சுற்றுலா கேந்திர நிலையமாக ஊக்குவிப்பதிலும், சந்தைப்படுத்துவதிலும் இந்தப் பணியகம் முக்கிய பங்காற்றுகிறது. தீவின் பொக்கிஷமான இயற்கை, கலாசாரம் மற்றும் தீரச்செயல் போன்றவற்றை ஊக்குவிப்பது, உலகளாவிய சுற்றுலாப் பயண சமூகத்தைக் கவர்ந்திழுப்பது, இந்தச் சிறிய தீவினால் வழங்கக்கூடிய களிப்பூட்டும் பன்முக அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் வரவழைப்பது போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்தி இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 20 சந்தைகளில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் சந்தைப்படுத்தல், பொதுமக்கள் தொடர்பு, விளம்பரப்படுத்தல் மற்றும் நிகழ்வுகள் பிரிவுகளினால் மூலோபாய ஊக்குவிப்புச் செயற்பாடுகள் வினைத்திறனான முறையில் திட்டமிட்டப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

நோக்கு

“மறக்கமுடியாத, உண்மையான மற்றும் பரந்துபட்ட அனுபவங்களை வழங்கக் கூடிய உலகின் மிகச்சிறந்த தீவுக்கான இடமாக அங்கீகரிக்கப்படல்”.

நோக்கு

“இலங்கையின் இயற்கை, கலாசாரப் பண்பாடு ஆகியன சமூகத்தில் உள்ளடக்கியிருப்பதையும், சூழலுக்குப் பொறுப்பான, சமூகங்களுக்கும், நாட்டுக்கும் பொருளாதார ரீதியில் நன்மையை வழங்கும் வகையிலான தன்மையை பிரதிபலிக்கும் தன்னிகரற்ற அனுபவத்தை வழங்கும் உயர்ந்த பெறுமதி வாய்ந்த இடமாக நிலைப்படுத்தல்”.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப

2022.12.31 ஆம் திகதியன்று இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபை 2020

திருமதி கிமாலி பெர்னாந்து
தலைவர்
2022 பெப்ரவரி 25-2022 மே 24

திரு. சாலக கஜபாகு
தலைவர்
2022 மே 31-2022 டிசம்பர் 31

திருமதி தம்மிகா கே. விஜசிங்ஹ
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 பெப்ரவரி 25-2022 ஒக்டோபர் 05

திருமதி தம்மிகா கே. விஜசிங்ஹ
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 பெப்ரவரி 25-2022 ஒக்டோபர் 05

செல்வி.கே.பி.பி.சிறிவர்தன
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 பெப்ரவரி 25-2022 டிசம்பர் 31

செல்வி.சுரங்க பிரேமனி விதானகே
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 பெப்ரவரி 25-2022 டிசம்பர் 31

திரு.எக்சத் விஜேரத்ன
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மார்ச் 21-2022 டிசம்பர் 31

திரு.அனுர லொகுஹெட்டி
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மார்ச் 21-2022 மே 31

திரு.சமின் விக்ரமசிங்ஹ
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மே 31-2022 டிசம்பர் 31

திரு. சந்தன தல்வத்த
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மார்ச் 21-2022 டிசம்பர் 31

திரு.நளின் ஜயசுந்தர
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மார்ச் 21-2022 டிசம்பர் 31

திரு.தர்ஷன கப்ரால்
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மார்ச் 21-2022 டிசம்பர் 31

திரு.தெவிந்திர சேனாரத்ன
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மார்ச் 21-2022 டிசம்பர் 31

திரு.ஆர்.எச்.டபிள்யூ.அநுராத குமாரசிறி
பணிப்பாளர் சபை உறுப்பினர்
2022 மே 31-2022 டிசம்பர் 31

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப

2022.12.31 ஆம் திகதியன்று இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள்

திருமதி கிமாலி பெர்னாந்து
தலைவர்
01.01.2022 - 31.05.2022

திரு. சாலக கஜபாகு
தலைவர்
01.06.2022 - 31.12.2022

கே.பி.பி சிறிவர்தன
முகாமைத்துவப் பணிப்பாளர்
01.01.2022 - 31.12.2022

மதுப்ஹானி பெரேரா
பணிப்பாளர் ∴ பொதுமக்கள் தொடர்பு
01.01.2022 - 31.12.2022

துஷான் விக்ரமசூரிய
பணிப்பாளர் ∴ சந்தைப்படுத்தல்
01.01.2022 - 31.12.2022

டி.பி தலுவத்த
பணிப்பாளர் ∴ நிகழ்வுகள்
01.01.2022 - 31.12.2022

இந்திரஜித் த சில்வா
பணிப்பாளர்∴மூலோபாயத் திட்டமிடல் மற்றும் ஆய்வு
01.01.2022 - 31.12.2022

ஏ.எம்.பிரேமதிலக
பணிப்பாளர் ∴ நிதி
01.01.2022 - 31.12.2022

மிஹிர லியனாராச்சி
மனித வளங்கள் மற்றும் நிர்வாக பதில் பணிப்பாளர்
01.01.2022 - 19.04.2022

மிஹிரி விஜேசிங்ஹ
மனித வளம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர்
20.04.2022 - 31.12.2022

சந்தைப்படுத்தல்

சுற்றுலா முகவர்கள், ஊடகங்கள் அறியப்படுத்தல்

ரஷ்யா மற்றும் உக்ரெய்ன் வர்த்தக அறியப்படுத்தல் சுற்றுலா (12 சுற்றுலா இயக்குனர்கள், 72 உள்ளூர் பிரதிநிதிகளுடன் வியாபரங்களுக்கிடையிலான வியாபாரம் (B2B)

பயண இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் / ஹோட்டல் உரிமையாளர்கள்

ஊக்குவிப்பு செயற்பாடுகளின் ஓர் அங்கமாக 2022 ஜனவரி 23 -29 வரையான காலப் பகுதியில் இலங்கை வழங்கும் உற்பத்திகள் மற்றும் சேவைகள் குறித்து தம்மை அறியப்படுத்துவதற்காக ரஷ்யா மற்றும் உக்ரெய்ன் பயண முகவர்கள் குழுவொன்று அழைக்கப்பட்டது. 70ற்கும் அதிகமான இலங்கையின் பயண இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு வெற்றிகரமான வியாபாரங்களுக்கு இடையிலான வியாபார அமர்வை ஏற்பாடு செய்து அதன் ஊடாக உள்நாட்டு பயண முகவர்களுக்கும், ஹோட்டல் உரிமையாளர்களுக்கும் இலங்கையை ஊக்குவிப்பதற்கான புதிய வியாபாரங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் வாய்ப்பை வழங்கியது.



முகவர்களை வரவேற்றல்



வணிகங்களுக்கிடையிலான அமர்வு

பங்களாதேஷ் வர்த்தக மற்றும் ஊடக அறியப்படுத்தல் (16 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு) 60 பயண இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் / ஹோட்டல் உரிமையாளர்களுடன் வியாபரங்களுக்கிடையிலான வியாபாரம் (B2B)

இலங்கை சுற்றுலா உக்குவிப்புப் பணியகம் 2022 பெப்ரவரி 25ஆம் திகதி முதல் 2022 மார்ச் 08ஆம் திகதி வரையில் 08 நாட்களுக்கு பங்களாதேஷ் பயண எழுத்தாளர்கள் சங்கம் (BDTWA) மற்றும் பங்களாதேஷ் சுற்றுலா இயக்குனர்கள் சங்கம் (TOAB) ஆகிய இரண்டு குழுக்களுக்கும் அறியப்படுத்தல் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் குழுக்களில் பங்களாதேஷ் சுற்றுலா இயக்குனர்கள் சங்கத்தின் சார்பில் 6 பேரையும், பங்களாதேஷ் பயண எழுத்தாளர்கள் சங்கம் சார்பில் 6 உறுப்பினர்களையும் அதில் 4 பேர் எழுத்தாளர்கள் இருவர் புகைப்பிடிப்பாளர்கள் உள்ளடங்கியிருந்தனர். இந்த உறுப்பினர்கள் 50 முன்னணி சுற்றுலா இயக்குனர்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள்.ஃஊடகவியலாளர்களுடன் வியாபாரங்களுக்கிடையிலான வியாபார சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.



முகவர்கள் வரவேற்கப்படுகின்றனர



சிகிரியாவுக்கான விஜயம்

போலந்திலிருந்து தொலைக்காட்சிக் குழு – போலந்து நாட்டு தொலைக்காட்சிக்கான ஆவணப்படம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் போலந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து போலந்து நாட்டிலுள்ள தொலைக்காட்சி அலைவரிசையொன்றுக்கு அறியப்படுத்தல் பயணச் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன், இது 2022 மார்ச் 03-09 வரையில் ஒளிபரப்பப்படும். ரிவிஎன் (TVN) தொலைக்காட்சி என்பது ரிவிஎன் டிஸ்கவரி பொலஸ்காவின் (TVN Discovery Polska) முன்னணித் தொலைக்காட்சி அலைவரிசை என்பதுடன், இது போலத்தில் உள்ள இரண்டு முக்கிய வர்த்தகத் தொலைக்கட்சி நிறுவனங்களில் ஒன்றாகும். "சிட்டி.ீ.றீஜன் இன் சீ யூ" (City/Region in See You) மற்றும் "குட் மோர்னிங் ரிவிஎன்- ரிவிஎன் டிஸ்கவரி" (Good Morning TVN - TVN Discovery) ஆகிய ஆவணப்படங்களைத் தமது புதிய தரத்தில் மூன்று அத்தியாயங்களில் தயாரிக்க ரிவிஎன் அலைவரிசை எதிர்பார்த்திருந்தது.



குழுவை வரவேற்றல்




குழுவினர் விமான நிலையத்தில்

ஐக்கிய இராச்சிய சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அழகி இலங்கைக்கு விஜயம்

சர்வதேச உலக அழகி இந்த வருடம் ஒக்டோபர் இங்கு வருகிறார், பிரபஞ்ச அழகி, உலக அழகி ஆகிய போட்டிகளுடன் இணைந்ததாக நடத்தப்படும் மூன்று பாரிய போட்டிகளில் இது ஒன்றாகும். இவர் 2022 பெப்ரவரி 03ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதுடன், அவருடைய இந்த விஜயத்தின் நோக்கம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் கைகோர்த்து, ஐக்கிய இராச்சியத்தில் இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்கப்படுத்துவதாகும். இவர் பெர்மிங்ஹாம் நகரத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் பிரஜை என்பதுடன், 50 பிரிட்டிஷ் நபர்களுடன் போட்டியிட்டு வெற்றிபெற்றவராவார். ஐக்கிய இராச்சியத்தில் பயண இடத்தை ஊக்குவிக்கும் தூதுவராகச் செயற்படுவார்.







2022 இல் நெஸ்பி பிரபு இலங்கைக்கு விஜயம் - ஐக்கிய இராச்சிய பயணிகளுக்கான சுற்றுலா தளம் இலங்கை என்பதை உறுதிப்படுத்தினார்


மக்கள் தமது முகங்களில் அழகான புன்னகையைக் கொண்ட உலகின் வேறந்த இடத்திலும் நான் இருந்ததில்லை, ஏறத்தாழ ஒவ்வொரு நாளும் சூரிய உதயம் காணப்படுவதுடன், நீங்கள் உண்மையிலேயே வரவேற்கப்படுகின்றீர்கள், வருகை தந்து இலங்கையை ரசித்திடுங்கள்

-கௌரவ நெஸ்பி பிரபு ஐக்கிய இராச்சியம்

ஐக்கிய இராச்சியத்தின் நெஸ்பி பிரபுவின் ஷசொர்க்கத்தின் இழப்பு, சொர்க்கத்தின் மீட்சி' (பரடைஸ் லொஸ்ட், பரடைஸ் ரீகெயின்ட்) என்ற புத்தக வெளியீட்டுக்கு இலங்கை சுற்றுலாத்துறை ஒத்துழைப்ப வழங்கியது. பிரித்தானியாவின் கொன்சவேட்டிவ் கட்சியின் அரசியல்வாதியும், இலங்கை தொடர்பான அனைத்துக் கட்சிகளின் இணைத் தலைவருமான அவருடைய "இலங்கை : சொர்க்கத்தின் இழப்பு, சொர்க்கத்தின் மீட்சி" என்ற புத்தகம் 2022.03.29 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டது.










வியட்னாம் வர்த்தக அறியப்படுத்தல் சுற்றுலா (18 முகவர்கள்) 13-19 மார்ச் - வியாபரங்களுக்கு இடையிலான வியாபார அமர்வு மார்ச் 18

வியட்னாம் சுற்றுலா சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறந்த சுற்றுலா இயக்குனர்கள் உள்ளடங்கிய 13 உறுப்பினர்களைக் கொண்ட குழுவுக்கான ஊடக மற்றும் வர்த்தக அறியப்படுத்தல் சுற்றுலாவொன்றை வியட்னாமிலுள்ள இலங்கைத் தூதுரகத்துடன் இணைந்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் குழுவுக்கு 2022 மார்ச் 13ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை சுற்றுலாவினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. இலங்கையை சுற்றுலாவுக்கான ஸ்தலமாக ஊக்குவிக்கும் வகையில் துறைசார் பங்காளர்கள் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரிகளுடன் இந்தக் குழுவினர் இதன்போது ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளவுள்ளனர். அவர்களின் சுற்றுலாவின் இறுதி நாளில் பயண இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் / ஹோட்டல் உரிமையாளர்களுடன் கொழும்பில் வியாபாரங்களுக்கு இடையிலான வியாபார அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வியட்னாம் சுற்றுலா இயக்குனர்கள் குழு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை சுற்றுலா அதிகாரிகளால் வரவேற்கப்பட்டனர்.



வரவேற்பு


வியாபாரங்களுக்கிடையிலான வியாபாரம்

“ஏரோ டெலிகிரா.ஃப்” (Aero TELEGRAPH) இன் ஜேர்மன் சுற்றுலா எழுத்தாளருக்கான ஊடக அறியப்படுத்தல் சுற்றுலா

ஜேர்மன் விமானப் பயண மற்றும் விமானப் போக்குவரத்து இணையத்தளமான ஏரோ டெலிகிரா.ஃப் இன் பிரதி ஆசிரியர் “எரோ டெலிகிரா.ஃப்.கொம்” இணையத்தளத்துக்கான பயண இலக்குத் தொடர்பான அறிக்கையிடலுக்காக 2022 மார்ச் 24 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இலங்கை வந்தார். ஜேர்மன் மொழி பேசப்படும் ஜேர்மன், சுவிட்சர்லாந்து, ஐரோப்பாவின் அவுஸ்திரியா போன்ற நாடுகளில் அதிகம் பின்தொடரப்படும் விமானப் பயண மற்றும் விமானப் போக்குவரத்து இணையத்தளமாக ஏரோ டெலிகிரா.ஃப்.கொம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் புராதன தம்புள்ள நகரம், சிகிரியா, கண்டி, வனஜீவராசிகள், தாவரங்கள் மற்றும் வனவிலங்கு, சிலோன் தேயிலை, ஆயுர்வேதம் மற்றும் கிராமங்களின் வாழ்கை முறை போன்ற பல்வேறு விடயங்களைத் தனது அறிக்கையிடலில் உள்ளடக்கியிருந்தார். 2011ஆம் ஆண்டு ஆரம்பித்ததிலிருந்து மாதாந்தம் தனித்துவமாக 950,000 பயன்படுத்துனர்களையும், செய்திமடலுக்கு 12,000 சந்தாதாரர்களையும் கொண்டுள்ளது.






“வேசர்-சூரியெய்” (Weser-Kurier) இலிருந்து வருகை தந்த ஜேர்மன் பயண எழுத்தாளருக்கான ஊடக அறியப்படுத்தல் சுற்றுலா

ஜேர்மன் பத்திரிகையான “வேசர்-குரியெய்” இன் (சுற்றுலா பக்கங்கள்) பிரதம ஆசிரியர் மெரீஸ் டாஜ்டெல் இலங்கையின் ஆயுர்வேதம் தொடர்பில் தனது சுற்றுலாக் கட்டுரையை உருவாக்குவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்தார். “வேசர்-குரியெய்” பத்திரிகை வடமேல் ஜேர்மனியின் -பேர்மனில் மிகவும் முன்னணி வகிக்கும் பத்திரிகையாகும். 2022 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இவர் பாசிக்குடா, காலி, வாத்துவ மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் பல்வேறு இடங்களைப் பார்வையிட்டிருந்தார். இது தொடர்பில் அச்சிடப்பட்ட சஞ்சிகை ஏறத்தாழ 200,000 வாசகர்களுக்குச் சென்றிருப்பதுடன், இது பற்றிய ஒன்லைன் பதிப்பு www.weser-kurier.de என்ற இணையத்தளத்தில் காணப்படுகிறது.






ஜேர்மனியின் “பிஸ்னஸ் அன்ட் டிப்ளோமஸி” சஞ்சிகை பிரதம ஆசிரியருக்கு ஊடக அறியப்படுத்தல் சுற்றுலா

ஜேர்மன் நாட்டின் சஞ்சிகையான “பிஸ்னஸ் அன்ட் டிப்ளோமஸி” என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் (திரு.ரெய்னர் ஷ ுபர்ட்) அவர்களுக்கு ஊடக அறியப்படுத்தல் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. “சுற்றுலா தொடர்பான வரைபடத்திற்கு மீண்டிருக்கும் இலங்கை” என்ற செய்தியை தனது வாசகர்களுக்கு வழங்கும் ஆதேநேரம், மலையகப் பகுதிகள் குறித்து அறிக்கையிடும் நோக்கில் திரு.ஷுபர்ட் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். “பிஸ்னஸ் அன்ட் டிப்ளோமஸ ி” சஞ்சிகையானது வருடத்துக்கு இரண்டு தடவை பேர்லினில் வெளியிடப்படுவதுடன், ஒன்லைன் சஞ்சிகைக்கு மேலதிகமாக 10,000ற்கும் அதிகமான அச்சுப் பிரதிகள் வாசகர்களுடன் பகிரப்படுகிறது. வாழ்க்கைமுறை என்ற பிரிவின் கீழ் இந்த சஞ்சிகையில் இலங்கை குறித்து இரண்டு பக்கக் கட்டுரையொன்று வெளியாகியுள்ளது.

ஜேர்மன் மாணவர்கள் குழுவுக்கு வசதிகளை ஏற்படுத்தல்



கார்ல்ஸ்ரஹே தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த 14 மாணவர்கள் மற்றும் 3 கல்விசார் பணியாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று இலங்கைக்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டிருந்தது. இவர்களைச் சந்தித்த இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் அதிகாரிகள் இலங்கை குறித்த குழுவின் ஆய்வுக்குத் தேவையான சுற்றுலா பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொண்டது. (கால்ஸ்ரஹே தொழில்நுட்ப நிறுவனம் என்பது ஜேர்மனின் பேடன்-வுர்ட்டம்பெர்க் மாநிலத்தில் உள்ள இரண்டாவது பெரிய நகரான கால்ஸ்ரஹே பகுதியில் அமைந்துள்ள ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பல்கலைக்கழகமாகும்)

கொல்ஃப் விளையாட்டை விரும்பும் செக் குடியரசைச் சேர்ந்த குழுவினர்

அவுஸ்திரியாவில் ஒத்துழைப்புடன் செக் குடியரசிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் 2022 பெப்ரவரியில் இந்த விஜயம் ஒழுங்குசெய்யப்பட்டது. இந்தக் குழுவானது அவுஸ்திரியா மற்றும் செக் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கொல்ஃப் விளையாட்டில் சிறப்புப் பெற்றவர்கள், கொல்ஃப் பாடநெறி உரிமையாளர்கள், யோகா வழிகாட்டிகள் மற்றும் ஆரோக்கியத்தில் சிறப்புப் பெற்ற பயண முகவர்கள் உள்ளடங்கலாக 16 பேரை உள்ளடக்கியதாகும்.





கொரியா ஹரால்ட் (1 ஊடகவியலாளர்) மற்றும் எல்லே கொரியா (1 ஊடகவியலாளர்)புகைப்படப்பிடிப்பாளர்) 24 -29 மார்ச்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணிப்பகம், கொரியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து கொரியாவின் முதன்மை வெளியீடுகளான கொரியா ஹெரால்ட் மற்றும் தி எல்லே கொரியாவைச் சேர்ந்த 3 ஊடகவியலாளர்களுக்கு அறியப்படுத்தும் சுற்றுலாவை 2022 மார்ச் 24 முதல் 29 வரை ஏற்பாடு செய்திருந்தது. சம்பந்தப்பட்ட வெளியீடுகள் ஊடாக சாதகமான செய்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் கொழும்பு, அனுராதபுரம், சிகிரியா, கண்டி மற்றும் பெந்தோட்டை போன்ற இடங்களுக்கு அவர்கள் விஜயம் செய்திருந்தனர்.









எல்லே கொரியா சஞ்சிகையில் இலங்கை தொடர்பில் 3 சஞ்சிகைகளில் 18 பக்க கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. (ஒன்லைன் மற்றும் ஒ.ப்லைன்)







எல்லே கொரியா இணையத்தளத்தில் இலங்கை பற்றிய கட்டுரைக்கான இணைப்பு

https://www.elle.co.kr/article/65962

கொரியா ஹெரால்ட் பத்திரிகையில் இலங்கை குறித்து 2 பக்க விபரணக் கட்டுரை வெளியாகியிருந்தது.





கொரியா ஹெரால்ட் பத்திரிகையின் இணையத்தளத்தில் இலங்கை பற்றிய கட்டுரைக்கான இணைப்பு :

https://m.koreaherald.com/view.php?ud=20220915000783&np=1&mp=1&fbclid=IwAR08lFg7YE5brI7w7ZD4DugneakXoD3Zj-uC26dS8E0DsHCSWXiQ3cC9Y0

கொரியப் பத்திரிகை ' சஞ்சிகை விளம்பரங்கள்


தூதரகத்துடன் இணைந்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் கொரியாவின் "ஜியும்கான்" (Geumgang) பத்திரிகையில் கண்களைக் கவரக்கூடிய "கண்டி எசல பெரஹர" புகைப்படங்களைக் கொண்ட விபரங்களுடன் கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. (ஒன்லைன், ஒ.ப்லைன்)

https://www.ggbn.co.kr/news/articleView.html?idxno=50792

சஞ்சிகையின் இணைய இணைப்பு



இலங்கையின் 74 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு “கொரியா போஸ்ட்” ஊடக வலையமைப்பில் இலங்கையின் இருதரப்பு ஒத்துழைப்பு, சுற்றுலா தலங்கள் மற்றும் கலாசாரத்தை சித்தரிக்கும் கட்டுரையை வெளியிட்டது. கொரியன் டெய்லி மீடியா ஹெட்லைன்ஸ், த கொரியா போஸ்ட் ஒன்லைன் போன்ற மாதாந்த அச்சுப் பதிப்புக்கள் மற்றும் த கொரியன் போஸ்ட் என்ற கொரிய மொழியிலான இணையப் பதிப்புக்களை உள்ளடக்கிய வலையமைப்பாகும்.



http://www.koreapost.com/news/articleView.html?idxno=26695



(3) இலங்கையின் 74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு “சியோல் சிட்டி” இதழில் இலங்கையின் இருதரப்பு ஒத்துழைப்பு, சுற்றுலா இடங்கள் மற்றும் கலாசாரத்தை சித்தரிக்கும் கட்டுரையை தூதரகம் வெளியிட்டது.

http://www.seoulcity.co.kr/news/articleView.html?idxno=410669

இந்தியாவின் பெண்கள் தேசிய கிரிக்கெட் அணி சிகிரியா சுற்றுலா, 2022 ஜூன் 28

இந்தியா மற்றும் ஏனைய தெற்காசிய நாடுகள் சந்தையின் கீழ் இந்தியாவின் பெண்கள் தேசிய கிரிக்கெட் அணி மற்றும் இலங்கைப் பெண்கள் கிரிக்கெட் அணிக்கு 2022 ஜூன் 28ஆம் திகதி சிகிரியாவுக்கான சுற்றுலாப் பயணமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. ஊக்குவிப்பை நோக்காகக் கொண்ட இந்தச் சுற்றுப் பயணம் இந்திய சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கை குறித்த சாதகமான விழிப்புணர்வை ஏற்படுத்தியது.






ஐக்கிய இராச்சியத்தின் லிங்கன் பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று ஆய்வுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்தது

ஐக்கிய இராச்சியத்தின் லிங்கன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பதினேழு மாணவர்களைக் கொண்ட குழுவொன்று, இலங்கை மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் சுற்றுலா அனுபவங்களை ஆய்வு செய்வதற்காக குறுகியகால பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது. பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு எதிராகப் பல பயண எச்சரிக்கைகளை விடுத்திருந்தபோதிலும், அதனையும் மீறி இந்தக் குழு தலைவர் பேராசிரியர் மார்ட்டின் நைட் அவர்களின் வழிகாட்டிலின் கீழ் இலங்கை வந்து சுற்றுப் பயணத்தை மேற்கொண்டது. பேராசிரியர் மாணவர்களுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இணைந்துகொண்டிருந்தார்.




குழுப் புகைப்படம் ' மாணவர்களுக்கான முன்வைப்பு

ஜேர்மனியிலிருந்து டிஜிட்டல் நாடோடி

டிஜிட்டல் தூதுவரான திரு. மட்.டி காசின் 2022 ஜனவரி 23ஆம் திகதி இலங்கைக்கு வந்து அன்று முதல் 2022 ஏப்ரல் வரையில் தங்கியிருப்பதற்கான விசாவைப் பெறுவதற்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் உதவிசெய்திருந்தது. வெளிநாட்டில் இருந்து வேலை செய்ய விரும்பும் வெளிநாட்டு தொழிலாளர்கள்.ஃ. தொழில்முனைவோரை ஈர்க்கும் நோக்கில் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கை ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் இங்கு தங்கியிருக்கும் நீண்டகாலத்தில் சமூக ஊடகங்களின் ஊடாக பிரசாரம் எதிர்பார்க்கப்படுகிறது.




2022 ஏப்ரல் 1-8 நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்துக்கான ஊடக அறியப்படுத்தல் சுற்றுலா

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது தெர்லாந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளிலிருந்து ஆறு சுற்றுலா வலைப்பதிவாளர்களை அறியப்படுத்தல் சுற்றுலாவுக்கு அழைத்திருந்ததுடன், இது 2022 ஏப்ரல் 01 முதல் 08 வரை இடம்பெற்றது. பன்முகப்படுத்தப்பட்ட இலங்கையின் செழுமையான பன்முகத்தன்மை, கச்சிதமான தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றைக் கண்டுகளிக்கக் கூடிய முக்கிய சுற்றுலா தலங்களுக்கு இந்தக் குழு விஜயம் செய்தது. சூரியன், கடல் மற்றும் மணல், கலாச்சாரம் மற்றும் இயற்கை ஆகியவை இந்த அறியப்படுத்தல் சுற்றுலாவின் இலக்குப் பிரிவுகளாக அமைந்தன.

அஜர்பர்ஜான் வர்த்தக அறியப்படுத்தல் சுற்றுலா (16 சுற்றுலா இயக்குனர்கள்) 45 உள்நாட்டு பயண இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் ∴ ஹோட்டல் உரிமையாளர்களுடன் வியாபரங்களுக்கிடையிலான வியாபாரம் (டீ2டீ)

எயார் அரேபியாவிற்காக நவலோக ஏவியேஷன் ஜிஎஸ்ஏ நிறுவனத்துடன் இணைந்து அஜர்பைஜானைச் சேர்ந்த 16 பயண முகவர்களுக்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 2022 நவம்பர் 08 முதல் நவம்பர் 14 வரை வர்த்தக அறியப்படுத்தல் சுற்றுலாவொன்றை ஏற்பாடு செய்திருந்தது. உள்நாட்டின் பயணப் பங்காளர்கள் புதிய தொடர்புகளை ஏற்படுத்தி புதிய வர்த்தகத்தை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஏற்பாடு செய்துகொடுத்திருந்தது. நவம்பர் 12ஆம் திகதி தாஜ் சமுத்திரா ஹோட்டலில் உள்நாட்டு பயண இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் உள்ளடங்கலான தரப்பினருடன் வியாபாரங்களுக்கிடையில்ான வியாபார அமர்வு வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





“முருகன் அடிச்சுவடு” இன் ஊடாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார மற்றும் வரலாற்று உறவுகளை மேம்படுத்தல்


“முருகன் அடிச்சுவடு” என்ற தென்னிந்தியாவின் சென்னையிலிருந்தான ஊடக அறியப்படுத்தல் சுற்றுலாவின் ஊடாக இந்தியாவுடன் காணப்படும் கலாசார மற்றும் வரலாற்று உறவுகளைப் பலுப்படுத்த இலங்கையால் முடிந்துள்ளது. இந்தச் சுற்றுலா 2022 ஓகஸ்ட் 3 முதல் 13 வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த அறியப்படுத்தல் சுற்றுலாவின் நோக்கம் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவில், கதிர்காமக் கந்தன் கோவில் உள்ளிட்ட வடக்கிலிருந்து தெற்கு வரையான முருகனின் அடிச்சுவடுகளை இணைக்கும் 10 வணக்கஸ்தலங்களை இணைப்பதாகும்.





வலைப்பதிவாளரின் குடும்ப விஜயம்

வலைப்பதிவாளரான தாரா மற்றும் அவருடைய குடும்பத்தின் மார்ச் 24 முதல் ஏப்ரல் 5 வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். இலங்கை சுற்றுலா தொடர்பில் அவர் தனது இஸ்டர்கிராமில் 50 பதிவுகளைப் பகிர்ந்துள்ளார்.





இந்திய ஊடவியலாளர்களைக் கொண்ட குழுவுக்கு இலங்கை சுற்றுலா ஊடக அறியப்படுத்தல் சுற்றுலாவை ஏற்பாடு செய்தது

இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்தும் நோக்கில் ஊடகவியலாளர்கள், வலைப்பதிவாளர்கள் மற்றும் செல்வாக்குச் செலுத்துபவர்கள் உள்ளடங்கலான இந்திய ஊடகக் குழுவொன்று நம்பர் 15 இலங்கை வந்தது. ஊடகவியலாளர்கள், வலைப்பதிவாளர்கள் மற்றும் செல்வாக்குப் செலுத்துபவர்கள் உள்ளடங்கலாக 17 பேரைக் கொண்ட இந்தக் குழு ஷடைம்ஸ் ஒவ் இந்தியா”, “வைட் ஹட் மீடியா (பிரைவட்) லிமிடட், நஷனல் ஜியோகிர.்பி ட்ரவலர், யூடியூப் சனல் - டமிள் நவிகேஷன், இஸ்டகிராம்- மலையாளி யத்ரகல், டார்க் ஏஞ்சல், சுர்பி - சுற்றுலா மற்றும் வாழ்க்கை முறை வலைப்பூக்கள், எக்ஸ்புளோர் வித் எகோகட்ஸ், லெமோனிக்ஸ்.கொம் போன்றவற்றை இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். இந்த ஊடகக் குழுவினர் பாரம்பரியம், தென்பகுதி கரையோரம் மற்றும் அட்வெஞ்சர் போன்ற விடயங்களுக்காக மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

எகிப்து பயண முகவர்களுக்கு தொழில்துறை அறியப்படுத்தல் சுற்றுலாவை ஏற்பாடு செய்வது குறித்து இலங்கை சுற்றுலா அவதானம்

எகிப்தில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து 8 எகிப்து பயண முகவர்களுக்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் 2022 ஒக்டோபர் 20ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரையில் அறியப்படுத்தல் சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையில் தங்களின் அனுபவத்தில் அவர்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். இந்தச் சுற்றுப் பயணத்தின் பின்னர் 2022 ஒக்டோபர் 25ஆம் திகதி கொழும்பு மோவின்பிக் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வியாபாரங்களுக்கிடையிலான வியாபார அமர்வில் இவர்கள் பங்கெடுத்தனர். தொழில்துறையைச் சேர்ந்த 50ற்கும் அதிகமான உள்நாட்டு சுற்றுலா இயக்குனர்கள் கலந்துகொண்டு தொடர்புகளைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றனர்.









இத்தாலி - இத்தாலி எயார்லைன்ஸ் (ITA) மற்றும் சுற்றுலா சங்கம் (ASTIO) 2022 ஜனவரி 10



ஜேர்மன் - சுற்றுலா சங்கம் (DRV) - 2022 பெப்ரவரி 24



ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதரகம், ஜேர்மன் சுற்றுலா சங்கம் மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் என்பன இணைந்து 2022 பெப்ரவரி 24ஆம் திகதி "இலங்கைக்கான திறப்பு மற்றும் விருந்தோம்பல் துறையின் மறுமலர்ச்சி" என்ற தலைப்பில் வெபினார் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பெருந்தொகையான ஜேர்மன் சுற்றுலாப் பயண முகவர்கள் மற்றும் வெளிப்புற இயக்குனர்கள் கலந்துகொண்டனர்.

ஐக்கிய இராச்சியம் ' தேசிய சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் பிரதிநிதிகள் சங்கத்தின் (ANTOR) ஊடகச் சந்திப்பு : மெய்நிகர் சந்திப்பு 2022 மார்ச் 31

தேசிய சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் பிரதிநிதிகள் சங்கத்தின் ஊடகங்களுடனான வருடாந்த சந்திப்பில் இலங்கை சுற்றுலா பங்கேற்றது. முன்னணி அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையத்தள ஊடகங்களுடன் நேருக்கு நேரான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் 71ற்கும் அதிகமான ஊடகங்கள் பங்கெடுத்தன. இலங்கை சுற்றுலா ஐக்கிய இராச்சிய ஊடகங்களில் நாட்டைத் திறமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன், சுற்றுலா தலம் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தது. தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு ஊடக அறியப்படுத்தல் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும்.

அவுஸ்திரேலியா சுற்றுலா இயக்குனர்கள் கவுன்சிலின் (CATO) வெபினார் - அவுஸ்திரேலியா

தொற்றுநோய் சூழலின் பின்னர் அதன் உறுப்பினர்களுக்கு உலகளாவிய பயணம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சமூகத் தளத்தை எவ்வாறு மீளக்கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது தொடர்பில் ஆறு (06) நாட்கள் வெபினார்களை அவுஸ்திரேலியா சுற்றுலா இயக்குனர்கள் கவுன்சில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் 73 இலங்கை கம்பனிகள் பங்கேற்றிருந்தன.

ஜப்பான் - ஜப்பான் சுற்றுலா முகவர்கள் சங்கம் (JATA)

ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் ஜப்பான் சுற்றுலா முகவர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் பங்கேற்புடன் வெபினார் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஒக்டோபர் மற்றும் நவம்பர் காலப் பகுதியில் அவுஸ்திரேலியா சுற்றுலா இயக்குனர்கள் கவுன்சில் உறுப்பினர்கள் மத்தியில் ஐந்து செய்தி இதழ்கள் பகிரப்பட்டன

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் அவுஸ்திரேலியா சுற்றுலா இயக்குனர்கள் கவுன்ஸிலின் உறுப்பினராகும். அவுஸ்திரேலியா சுற்றுலா இயக்குனர்கள் கவுன்ஸில் என்பது சுற்றுலாத் தயாரிப்புக்களை அவுஸ்திரேலியாவின் உள்நாட்டிலும், சர்வதேச இடங்களுக்கும் விநியோகிக்கும் சுற்றுலா இயக்குனர்கள் மற்றும் மொத்தவிற்பனையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும். இது மொத்தம் 1200ற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டதாகும். இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் உறுப்பினர்கள் மத்தியில் இலங்கை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சுற்றுலா ஊக்குவிப்பை மேற்கொள்வதற்கும் ஐந்து இலத்திரனியல் நடன இசைகளைப் பகிர்ந்தளித்திருந்தது.

அவுஸ்திரேலியா சுற்றுலா இயக்குனர்கள் கவுன்சில் (ஊயுவுழு) மற்றும் அவுஸ்திரேலியா பயண முகவர்கள் சம்மேளத்தின் (யுகுவுயு) உறுப்புரிமையப் பெற்றுள்ளது.

பயண மற்றும் சுற்றுலாக் கண்காட்சிகள் மற்றும் வீதியோரக் கண்காட்சிகள் ' ஊடகவியலாளர் சந்திப்புக்கள்

இந்திய சுற்றுலா முகவர்கள் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு, 2022 மார்ச் 23

2022 மார்ச் 23ஆம் திகதி புதுடில்லியின் த பார்க் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பு மற்றும் வர்த்தகத் தொடர்பு அமர்வில் கலந்துகொள்ளுமாறு இலங்கை சுற்றுலாவுக்கு இந்திய சுற்றுலா முகவர்கள் சங்கத்திடமிருந்து அழைப்பு விடுக்கப்பட்டது. இந்திய சுற்றுலா முகவர்கள் சங்கத்தின் 66வது வருடாந்த மாநாடு மற்றும் கண்காட்சிக்கான துண்டுப்பிரசுரம் மற்றும் தொனிப்பொருளுக்கான குறியீடு என்பவற்றை புதுடில்லி த பார்க் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு மற்றும் வீதியோரக் கண்காட்சியில் வெளியிடப்பட்டது. இந்திய சுற்றுலா முகவர்கள் சங்கத்தின் 20 பிராந்தியங்களைச் சேர்ந்த 200ற்கும் அதிகமான சுற்றுலாப் பயண முகவர் பிரதிநிதிகளும், ஊடகப் பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





ளுயுவுவுநு சுற்றுலா கண்காட்சி- 2022 மே 20

2022 மே 18 முதல் 20 வரை இந்தியாவின் டெல்லி கிரேட்ட நொய்டாவில் நடைபெற்ற சுற்றுலா கண்காட்சியில் இலங்கை சுற்றுலா பங்கு பற்றியது. தேற்காசிய போக்குவரத்து மற்றும் சுற்றுலா பரிமாற்றம் 2022 (SATTE 2022) கண்காட்சியில் இலங்கையைச் சேர்ந்த 65 பயண மற்றும் சுற்றுலா கம்பெனிகள் 1200க்கும் அதிகமான கண்காட்சியாளர்கள், 35,000 அதிகமான வர்த்தக விருந்தினர்கள், 800ற்கும் அதிகமான விசேட விருந்தினர்கள், 50 ற்கும் அதிகமான நாடுகளில் இருந்து சுற்றுலா சபையின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இலங்கையின் காட்சிக்கூடம் 256.6 சதுர அடியாக காணப்பட்டதுடன், பார்வையாளர்களை கவர்ந்திழுக்க கூடிய வகையில் அதன் வடிவமைப்பும் அமைந்திருந்தது. இலங்கையின் கலாச்சாரம் மற்றும் பண்பாடு உடன் நிறைந்த விருந்தினர்களை கவரக்கூடிய சுற்றுலா தளங்களைக் கொண்ட இலங்கை என்பது இதன் ஊடாக பிரதிபலிக்கப்பட்டது.







அரேபிய பயண சந்தை (யுவுஆ)

ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் துபாய் உலக வர்த்தக மையத்தில் 2022 மே 9 முதல் 12-ம் திகதி வரை அரேபிய சுற்றுலாப் பயண சந்தை நடைபெற்றது. அரேபிய பயண சந்தை என்பது துபாயில் வருடாந்தம் நடத்தப்படுகின்ற சுற்றுலாத் துறைக்கான உத்தியோகபூர்வ மற்றும் துறைசார் நிகழ்வு என்பதுடன் இது உலகளாவிய பயண மற்றும் வர்த்தக வாய்ப்புகளை காட்சிப்படுத்துவதாக அமைகிறது.

சுற்றுலாத் துறையை முன்னேற்றுவதில் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் நோக்கில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது இலங்கையைச் சேர்ந்த 36 சுற்றுலா பங்குதாரர்களின் பங்களிப்புடன் கவர்ச்சியான பார்வை அரங்கொன்றை அமைத்திருந்தது. இலங்கை தொடர்பான இந்தப் பார்வை அரங்கின் சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு துபாயில் உள்ள இலங்கை கென்ஸியூலர் அலுவலகம் ஒத்துழைப்பை வழங்கியது.





லுமுளு இஒடன டஇனஆ

இந்திய பயண முகவர்கள் சங்கத்தின் (வுயுயுஐ) சிங்கப்பூர் கப்பல் மாநாடு ஓகஸ்ட்

2022 ஓகஸ்ட் 22 முதல் 25 வரை சிங்கப்பூரில் நடைபெற்ற இந்திய பயண முகவர்கள் சங்கத்தின் (வுயுயுஐ) 66 ஆவது கப்பல் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இலங்கை சுற்றுலா ஊக்கிவிப்பு பணியகத்தின் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது





இந்திய வீதியோரக் கண்காட்சி

2022 செப்டம்பர் 26 முதல் 30 வரை இந்தியாவின் பிரதான நகரங்களில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் தொடர்ச்சியான வீதியோரக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. முதலாவது வீதியோரக் கண்காட்சி செப்டம்பர் 26 ஆம் திகதி புதுடில்லியின் தாஜ் பலஸ் ஹோட்டலிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதனைத் தொடர்ந்து செப்டம்பர் 26ஆம் திகதி மும்பை சென் றெஜிஸ் ஹோட்டலிலும் இறுதியாக செப்டம்பர் 30 ஆம் திகதி ஹைதராபாத் தாஜ் கிருஷ்ணா ஹோட்டலிலும் இந்த வீதியோர கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த ஒவ்வொரு விதியோட கண்காட்சிகளும் மாலை நேர இணைப்பு அமர்வை தொடர்ந்து வியாபாரங்களுக்கிடையிலான வியாபாரம் (டீ2டீ) குறித்த அமர்வுகளுக்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. பிரபல கிரிக்கெட் நட்சத்திரம் சனத் ஜெயசூரிய இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.





2022 உலகப் பயண சந்தை (றுவுஆ) லண்டன் ஐக்கிய இராச்சியம்

உலகின் முன்னணியான பயண மற்றும் வர்த்தகக் கண்காட்சி 2022 நவம்பர் 7ஆம் திகதி ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் நகரில் ஆரம்பமானது. இந்த வருடம் 57 உள்நாட்டு ஹோட்டல் உரிமையாளர்கள் பயண இலக்கு முகாமைத்துவ கம்பெனிகள் மற்றும் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் என்பன தமது விருந்தினர்களுக்கு வழங்கக்கூடிய பயண அனுபவம் குறித்து காட்சிப்படுத்திருந்தனர். பயணத்துக்கான ஆர்வம் மற்றும் தூய்மையான இலங்கை என்பதை பிரபல்யப்படுத்தல், சிறந்த அனுபவத்தை வழங்குவது என்பவற்றைக் கருத்தில் கொண்டு பார்வை அரங்கம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

உலக பயண சந்தையின் ஆரம்ப தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னணி சர்வதேச மற்றும் பிராந்திய ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த 50-க்கும் அதிகமான ஊடகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பல்வேறு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் கௌரவ அமைச்சருடன் இலங்கை பார்வையாளர் கூட்டத்திலிருந்து தனித்தனியான பேட்டிகளை மேற்கொண்டிருந்தனர். இதனை விட ஊடே உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் தமது கலையரங்கங்களிலிருந்து செவ்விகளை எடுத்திருந்தன.









தூதரகத்தின் ஒத்துழைப்புடனான செயற்பாடுகள்

ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் சுற்றுலா முகவர் பகுதிகளில் இலங்கை தொடர்பில் பிரசாரங்களை முன்னெடுக்கும் காட்சிப்படுத்தல் பதாகைகள் (ரோலர் டிஸ்பிளே)

இலங்கைத் தூதரகத்தின் கோரிக்கைக்கு அமைய இலங்கை தொடர்பில் பிரசாரங்களை முன்னெடுக்க க்கூடிய இழுக்கக் கூடிய காட்சிப்படுத்தல் பதாகைகளை (ரோலர் டிஸ்பிளே) இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் வடிவமைத்து வழங்கியிருந்தது. வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் அபுதாபியில் முன்னணி பயண முகவரகங்களில் காட்சிப்படுத்துவதற்கே இந்தப் பதாகைகள் கோரப்பட்டிருந்தன. அபுதாபி மற்றும் அல் அயின் சுற்றுலா சந்தையில் 20 முதல் 30 வரையான முன்னணி முகவரகங்கள் காணப்படுகின்றன.

ஈரான் ' தெஹ்ரான் சர்வதேச சுற்றுலாக் கண்காட்சி - ஜனவரி 29 முதல் பெப்ரவரி 01 வரை

ஈரான் சந்தையில் உள்ள சுற்றுலாத்துறை இயக்குனர்களின் விபரங்கள் மற்றும் கோரப்பட்ட பிரசாரப் பொருட்களை அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் வழங்கியது.

ஈரான் ' ஊக்குவிப்பு நிகழ்வு, தெஹ்ரான் 2022 ஏப்ரல் 06

ஈரான் பயண சந்தையுடன் தொடர்புபட்ட பங்குதாரர்களுக்கான நிகழ்வை ஏற்பாடு செய்ய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியது.





ஓமான் ' கொல்ஃப் சுற்றுப்போட்டி

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து மஸ்கட்டில் கொல்ஃப் சுற்றுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கை சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு தொழில்துறையின் உதவியுடன் இலங்கைக்கு இலவச சுற்றுலாவை வழங்குவது இதன் நோக்கமாக அமைந்தது. இதன் வெற்றியாளர் திரு.அஹமட் லம்கி மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் இலங்கைக்கு வந்தபோது இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் வரவேற்றது.





இஸ்ரேல் ’ பலஸ்தீனில் உள்ள பயண முகவர்களுடன் சந்திப்பு

தூதரகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் தேவையான உதவியை வழங்கியது.





சுவீடன்’ சுற்றுலா நிகழ்வு (தெரிவுசெய்யப்பட்ட சுற்றுலாத்துறை / சுற்றுலாப் பயணக் கம்பனிகள் / நபர்களுக்கான முன்னிலைப்படுத்தல்) 2022 மார்ச் 15

இலங்கைக்கான சுவீடன் மற்றும் ஸ்கண்டிநேவிய சுற்றுலாச் சந்தைகளை மேலும் வலுப்படுத்தவும், கூட்டாண்மைகளை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு செல்வாக்குச்செலுத்தும் பயண இயக்குனர்கள் மற்றும் சுற்றுலாப் பயண ஆலோசகர்கள் அடங்கிய குழுவினருக்கு இலங்கை பற்றிய விளக்கக்காட்சியை அல்லது முன்னிலைப்படுத்தலை வழங்கும் நிகழ்வொன்றை ஸ்டொக்ஹோமிலுள் இலங்கைத் தூதரகம் மார்ச் 15ஆம் திகதி ஏற்பாடு செய்தது.

சுவீடனின் கஸ்டாஞ்ச் கலெக்ஷனைச் (Kastanj Collection) சேர்ந்த ஜொஹான் பெர்னட்ஸ் மற்றும் ஜெனட் பேலன்ட் ஆகியோர் இலங்கையில் அவர்களின் ஈடுபாட்டின் சுயவிவரத்துடன் முன்வைப்பாளர்களை அறிமுகப்படுத்தினர். அலெக்ஸ் சேம்பர்ஸ் - ஐக்கிய இராச்சியம் மற்றும் இலங்கையின் ஹம்மிங்பேர்ட், எலினர் மில்னர் - த ஸ்ரீலங்கன் கலெக்ஷன் யூகே, மார்சிலைன் பவுல் - உக எஸ்கேப்ஸ் ஸ்ரீலங்கா, சுவீடன் திரைப்படத் தயாரிப்பாளர் ஸ்டீபன் குவிந்த் ஆகியோர் தீவின் நேர்த்தியான அம்சங்களையும் தனித்துவமான அனுபவங்களையும் முன்வைத்தனர்.



விளக்கக்காட்சியில் பங்குபற்றுனர்கள்



தூதுவரின் உரை





இந்தோனேஷியா ' இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் பண்டரன் ர்ஐ ஆசுவு ஸ்டேஷனில் 2022 ஜூன் 24 முதல் 25 வரை நிகழ்வொன்றை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஏற்பாடுசெய்தது.





ஐக்கிய அமெரிக்கா ' நியூயோர்க் சுற்றுலா இயக்குனர்களுக்கு சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வு, ஜூன் 14

நியூயோர்க் சுற்றுலா இயக்குனர்களுக்கான இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வு 2022 ஜூன் 14ஆம் திகதி பி.ப 3 மணி முதல் 5 மணிவரை (அமெரிக்க நேரம்) நடைபெற்றது. இதனை அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் மற்றும் துருக்கி விமானசேவை என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.





சுவீடன் ' ஸ்டொக்ஹோம் இலங்கை காலாசார விழாவில் கலாசார, உணவு, நடன மற்றும் சுற்றுலா தலங்கள் என்பன சிறப்புப் பெற்றன

ஸ்டாக்ஹோமில் உள்ள எட்னோகிரா.்.பிஸ்கா அருங்காட்சியகம் மற்றும் மடமேக்கா, டுர்கார்ட்ஸ்ப்ரூன்ஸ்வேகன் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஷஇலங்கை கலாசார விழாவில்' இலங்கையின் துடிப்பான கலாச்சாரம், உணவு வகைகள், நடனம் மற்றும் சுற்றுலா தலங்களைக் காட்சிப்படுத்துவதற்கு இலங்கை மற்றும் சுவீடனைச் சேர்ந்த பல பங்காளர்கள் ஒன்றிணைந்தனர். 2022 ஒகஸ்ட் 28ஆம் திகதி நிறைவடைந்த இந்த விழாவில் 1300ற்கும் அதிகமான விருந்தினர்கள் கலந்துகொண்டிருந்தனர். ஐந்து நாள் கலாச்சார நிகழ்வு ஒகஸ்ட் 24ஆம் திகதி எட்னோகிரா.்.பிஸ்கா அருங்காட்சியகத்தில் இலங்கை உணவு வகைகள், பூஜைநடனம், சுரம்பலிய மற்றும் நாகரக்ஷா போன்ற இலங்கையின் பாரம்பரிய நடனங்கள், பாரம்பரிய இசை என்பவற்றுடன் ஆரம்பமாகியது.






ஐக்கிய இராச்சியம் ' கௌரவ அமைச்சரின் ஐக்கிய இராச்சிய விஜயம் - பயண முகவர்கள், சுற்றுலா இயக்குனர்கள் மற்றும் ஊடகங்களுடன் சந்திப்பு

லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து கௌரவ அமைச்சர் ஐக்கிய இராச்சியத்தின் பயண முகவர்கள், சுற்றுலா இயக்குனர்கள் மற்றும் ஊடகங்களுடன் வினையூக்கமான சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.




பிரான்ஸ் ’ பிரான்ஸ் நாட்டின் சுற்றுலா இயக்குனர்களுடன் சந்திப்பு

பிரான்சில் இலங்கை சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 2022 ஜூன் 20ஆம் திகதி பரிஸில் உள்ள இலங்கை தூதரகத்தினால் பிரான்சின் பயண முகவர்களுக்கும் சுற்றுலாத்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பொன்று தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐக்கிய இராச்சியம் ’ ‘பெட்.்போர்ட் நதி திருவிழா’ நிகழ்வில் சுற்றுலா ஊக்குவிப்பு - 2022 ஜூலை 23 - 24

இலங்கையின் கைவினைப்பொருட்கள், சுற்றுலா, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் “சிலோன் டீ” ஆகியவற்றைக் காட்சிப்படுத்தி அவர்களின் அடுத்த விடுமுறை இலக்கு இலங்கையாக இருக்க வேண்டும் என்ற பிரசாரம் பெர்.்போர்ட் சமூகத்தில் முன்னெடுக்கப்பட்டது. ஸ்டால் 36-37, மில் மெடோஸ், ரஸ்ஸல் பார்க், பெட்.்போர்ட்ஷையர், ஆமு40 3னூ என்ற இடத்தில் இது அமைக்கப்பட்டிருந்தது. இந்த பெட்.்போர்ட் நதித் திருவிழா மற்றும் அதனைச் சுற்றி 250,000 இற்கும் அதிகமானவர்கள் பங்கேற்றனர்.



ஐக்கிய இராச்சியம் ’ நொட்டிங்ஹாம் மாஸ்டர்ஸ் ஹொக்கி உலகக் கிண்ணம் 2022 இலங்கை ஊக்குவிப்புப் பிரசாரம், 2022 ஓகஸ்ட் 21

லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், இலங்கை தேசிய மாஸ்டர்ஸ் ஹொக்கி சங்கம் மற்றும் உலக மாஸ்டர்ஸ் ஹொக்கி லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து மாஸ்டர்ஸ் ஹொக்கி உலகக் கிண்ணத்தின் நிறைவு விழாவில் 2022 ஓகஸ்ட் 21ஆம் திகதி இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தது.



நெதர்லாந்து ' தூதரக விழா, 2022 செப்டெம்ப்ர 03

நெதர்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த "தூதரக விழா" 2022 செப்டெம்பர் 03 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவுபெற்றது. இது 10,000ற்கும் அதிகமான நெதர்லாந்து நாட்டவர் மற்றும் சர்வதேச பார்வையாளர்களை ஈர்த்திருந்தது. இதற்கான பார்வையாளர் அரங்கம் உணவு, சுற்றுலா ஊக்குவிப்பு, சிலோன் டீ என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.





அவுஸ்திரேலியா ' இலங்கை சுற்றுலாவை வர்த்தகநாமப்படுத்தும் வகையில் இலங்கைத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தூதரகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு உதவி 2022 செப்டெம்பர்



பெல்ஜியம் ' டிப்ளோமட்டிக் வேர்ல்ட் சஞ்சிகையில் இலங்கையின் ஊக்குவிப்புப் பிரசாரம்

இலங்கையில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக புகழ்பெற்ற காலாண்டு வெளியீடான ஷ டிப்ளோமட்டிக் வேர்ல்ட் சஞ்சிகை" இல் 6 பக்கக் கட்டுரையை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை பெல்ஜியத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டது.

பெல்ஜியத்தில் இலங்கையின் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் வெளியிடப்பட்ட செய்திக் கட்டுரைகள்

கட்டுரைத் தலைப்பு - "லங்கா" நவ்ஷடோவில் உள்ள தாய் மற்றும் மகனிடமிருந்து குடும்ப மெழுகுதிரி - பெலிஜியம் "சுட்பிரெஸ்" ஊடகத்தில் 2021.12.25 இல் பிரசுரிக்கப்பட்டது.

கட்டுரைத் தலைப்பு - "சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் உள்ள லா லா நிலம். தற்பொழுது இலங்கைக்குச் செல்வதற்கான 11 காரணங்கள்" - "வீக்கென்ட் நக்" டச்சு சஞ்சிகையில் 2022.01.26 இல் பிரசுரிக்கப்பட்டது.

கட்டுரைத் தலைப்பு - "இலங்கையை நோக்கிச் செல்வதற்கான 10 காரணங்கள்" - ஷஎல்ஈ விஜஎ.்.ப்' வாராந்த சஞ்சிகையில் 2022.02.17 இல் பிரசுரிக்கப்பட்டது.

கட்டுரைத் தலைப்பு - "ஆ6 சனல் "பீஜிங் எக்ஸ்பிரஸ்" இன் முதலாவது படத்தைப் பகிர்ந்தது" - பெல்ஜியம் "லி சொய்ர் மக்" சங்சிகையின் விசேட பதிப்பில் 2022.04.16 இல் பிரசுரிக்கப்பட்டது

தென் கொரியா ' சியோல் சர்வதேச பயணக் கண்காட்சி 2022 (ளுஐவுகு 2022)

2022 மே 23 முதல் 26 வரை நடைபெற்ற சியோல் சர்வதேசப் பயணக் கண்காட்சி 2022 இல் இலங்கை சுற்றுலா சார்பில் ஸ்ரீலங்கன் எயார் லைனஸ் உடன் இணைந்து இலங்கைத் தூதரகம் பங்கேற்றது. சாகசம், ஆயுர்வேதம் என சுற்றுலா பயணிகளுக்கு தீவு வழங்கும் பல்வேறு வசதிகள் மற்றும் அவற்றுக்கான சுற்றுலாத் தலங்களை சித்தரிக்கும் வகையில் இலங்கையின் காட்சிக்கூடம் அமைந்திருந்ததுடன், பார்வையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தையும் அது வழங்கியது.





தென் கொரியா ' 7வது கொரிய சர்வதேச சுற்றுலாக் கண்காட்சி (முஐவுளு 2022)

2022 ஆகஸ்ட் 11 முதல் 14 வரை நடைபெற்ற கொரிய சர்வதே சுற்றுலாக் கண்காட்சியில் இலங்கை சுற்றுலா சார்பாக இலங்கைத் தூதரகம், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் உடன் இணைந்து பங்கேற்றது. இதற்காக அமைக்கப்பட்டிருந்த இலங்கை பற்றிய அரங்கத்தில் இலங்கையின் பல்வேறு தனித்துவமான தயாரிப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டு அவை தீவின் பல்வேறு சுற்றுலா கருப்பொருள்களை சித்தரிக்கும் வகையில் அமைந்தன.





மக்கள் தொடர்பு

வருகைதரும் ஊடகவியலாளர்கள், வலைப்பதிவாளர்கள் மற்றும் தாக்கம்செலுத்துவோர் நிகழ்ச்சி

2022ஆம் ஆண்டில் ஊடக மற்றும் பயணத்தில் தாக்கம் செலுத்துவோருக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்ச்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. வருகைதரும் வலைப்பதிவாளர்கள் நிகழ்ச்சி மற்றும் பயணத்தில் தாக்கம் செலுத்துவோர் நிகழ்ச்சி என்பன உலகம் முழுவதிலுமுள்ள முக்கிய சர்வதேச பயணத்தில் தாக்கம் செலுத்துவோர் மற்றும் பிரதான ஊடகங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டன. சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை சிறந்த இடமாக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்பதைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை “மறக்கமுடியாத விடுமுறையை உருவாக்குதல்” என்பதைக் காண்பிப்பதற்கு அப்பால் இயற்கைச் சூழலக்கு ஆகக்குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தி சுற்றுலாத்துறையின் வாய்ப்புக்கள் உள்நாட்டு சமூகங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகிறது. அது மாத்திரமன்றி, இலங்கையானது “விடுமுறைக்கு சுற்றுலாசெல்லக்கூடிய பாதுகாப்பான இடம்” என்பது குறித்து உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

பிரசாரம் செய்வதன் இலக்குகள்:

- இலங்கைக்கு சர்வதேச சுற்றுலாப் பயணிகளை வரவேற்பது - பல தனித்துவமான காரணங்களை உருவாக்குதல்
- பயண இலக்காக அமையக்கூடிய இலங்கைக்கான பயணம் குறித்த பிந்திய தகவல்களை சரியான நேரத்தில் வழங்குதல்
- கொவிட் தொற்றிய பின் இலங்கையில் வாழ்க்கை எப்படி இயல்பானது என்பதைக் காண்பித்தல்.
- தீவின் கச்சிதமான தன்மை மற்றும் செழுமையான பன்முகத்தன்மை - இலங்கையில் கிடைக்கும் தனித்துவமான சாகச அனுபவங்கள் (இயற்கை வழித்தடங்கள் ∴ திமிங்கலங்களைப் பார்வையிடுவது ∴ ச∴பாரி ∴ உள்ளூர் கலாச்சார அனுபவங்கள்)
- பயணிகளின் நம்பிக்கையைப் பெறுதல் மற்றும் இலங்கையை “பாதுகாப்பாண பயண இடம்” என நம்பவைத்தல்.

பிராந்திய சுற்றுலாவை ஊக்குவித்தல்

- வட மத்திய மாகாணம் (அநுராதபுரம்)
- கிழக்கு மாகாணத்தை பிரசாரம் செய்தல் (அம்பாறை, அறுகம்பை, குமண, கல் ஓயா, ரஜகலதேன, குடும்பிமலை, பாணமை)
- மத்திய மாகாணம் (கண்டி, நக்கிள்ஸ், மலைகள், ஹீல்ஓயா, லங்காதிலக, நுவரெலியா, மாத்தளை ரத்தோட்டை-நதிக்கல்)
- தென் மாகாணம் (மிரிஸ்ஸ, திக்வெல்ல, பெந்தோட்டை, கொஸ்கொட, காலி)
- மேல் மாகாணம் (கொழும்பில் முன்னெடுக்கப்படும் நகர அபிவிருத்திகள் மற்றும் தாமரைக் கோபுரத்தின் கவர்ச்சி)

இலக்குவைக்கப்பட்ட பயணப் பிரிவுகள்

- சூரியன், மணல் மற்றும் கடல் சார் விடுமுறையைத் தேடுபவர்கள்
- சாகசப் பயணத்தை விரும்புபவர்கள்
- ஆடம்பரப் பயணம் மற்றும் தேன்நிலவுக்கான பணத்தைத் தேடுபவர்கள்
- சமையல் மற்றும் கலாசார ரீதியான பயணத்தைத் தேடுபவர்கள்

ஐக்கிய இராச்சியத்தின் ஐவுஏ இலங்கையில் படமாக்கப்பட்ட ‘இந்த காலைக் காட்சி’

இலங்கையைப் பற்றி மூன்று தொலைக்காட்சி அத்தியாயங்களை உருவாக்க பெப்ரவரி மாதம் ஐக்கிய இராச்சியத்தின் ஐ.டிவி அழைக்கப்பட்டது. ஒவ்வொரு அத்தியாயத்தையும் நாளாந்தம் 1.5 மில்லியனுக்கும் அதிகமான பிரிட்டிஷ் பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர். பிரபல தொலைக்காட்சி தொகுப்பாளரான திருமதி டெய்சி பெய்ன் (இலங்கை சுற்றுலாத்துறையின் அதிகாரப்பூர்வ முகப்புத்தகத்தில் வெளியிடப்பட்டது மற்றும் 72,000 பார்வைகளைப் பெற்றது) மூலம் கூடுதல் வீடியோ ஒப்புதல் வழங்கப்பட்டது.



ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பல்வேறு விருதுகளை வெற்றிகொண்ட 10 பயணத் தாக்கம் செலுத்துவோர் (2022 மார்ச்)

ஐக்கிய இராச்சியம், இந்தியா, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், நோர்வே, ஸ்பெயின், அவுஸ்திரேலியா, மலேசியா, கனடா போன்ற நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உலகளாவிய பார்வையாளர்களைக் கொண்ட சிறந்த தரவரிசையில் உள்ள சர்வதேச பயண செல்வாக்கு செலுத்துபவர்களின் குழுவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சுற்றுலாத் தயாரிப்புகள் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு நகர ஊக்குவிப்பு - கொழும்பு சுற்றுலா மற்றும் தேசிய அருங்காட்சியகம், ஹுருலு சுற்றுச் சூழல் பூங்காவில் ச.்.பாரி, சிகிரியா, இயற்கை மற்றும் நிலையான சுற்றுலா ஊக்குவிப்பு நக்கிள்ஸ் மலைகள், மற்றும் சமூக அடிப்படையிலான சுற்றுலா ஊக்குவிப்பு ஹீல் ஓயா கிராமத்தின் தொலைதூர கிராமம் ஹீல் ஓயா. பல் மற்றும் கலாச்சார சுற்றுலா: கண்டியின் பாரம்பரிய நடனக் கிராமம், நுவரெலியா சிலோன் டீ, கடல்சார் ஊக்குவிப்பு: மிரிஸ்ஸ சொகுசு திமிங்கலத்தைப் பார்ப்பது, பெந்தோட்டை நதிப் படகுச் ச.்.பாரி.





முற்கூட்டிய கிழக்கு கிரையோர பயண தாக்கம்செலுத்தவோர் ஊக்குவிப்பு ஊடகப் பயணம் (ஐக்கிய இராச்சியம், அயர்லாந்த, பெல்ஜியம், ஜேர்மனி) (2022 மார்ச்)

பெல்ஜியம், அயர்லாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளை சேர்ந்த பயணக் குழுவினருக்கு ஊடகச் சுற்றுலாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 2022 மார்ச 03ஆம் திகதி முதல் மார்ச் 20ஆம் திகதி வரை இது எற்பாடு செய்யப்பட்டது. 2022ஆம் ஆண்டில் இலையுதிர் காலத்திற்கான விடுமுறை சேரிடமாக கிழக்குக் கடற்கரையை பிரசாரம் செய்வது

ப்ரீத் அன்ட் செல்லிங் ஐக்கிய இராச்சியத்தின் பயண இதழில் (மார்ச் 2022) விருது பெற்ற பிரித்தானிய ஊடகவியலாளர் வருகை

வருகைதரும் ஊடகவியலாளர் திட்டம் 20நநஇன் கீழ் தி ப்ரீத் இதழில் இலங்கையைப் பற்றி ஒரு கட்டுரையை எழுதிய பல விருதுகளை வென்ற பிரிட்டிஷ் பயணப் பத்திரிகையாளர் திருமதி லாரன் ஜார்விஸ் அவர்களின் வருகைக்கு உதவிசெய்யப்பட்டது.


Sri Lanka excited for tourism

வாராந்த பயணம் - ஐக்கிய இராச்சியத்தின் சஞ்சிகை (2022 ஏப்ரல்)

ஐக்கி இராச்சியத்தின் பயண பத்திரிகையாளர் திருமதி யோலண்டா ஜப்பத்தேராவுக்கு ஊடக சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது, அவர் டிராவல் வீக்லி இதழுக்காக - நியமிக்கப்பட்டார். ஐஆஆ ஊடக வலையமைப்பு நிகழ்வின் போது யோலண்டா இலங்கையின் பிரசாரங்களைச் சந்தித்தார்.



ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பாவிலிருந்து ஊடகவியலாளர்கள் வருகை - மெட்ரோ - ஐக்கிய இராச்சியம், த ட்ரவல் சஞ்சிகை - பெல்ஜியம், ப்ரெஸ்டீஜஸ் சஞ்சிகை - பிரான்ஸ் (2022 மே)

ஐக்கிய இராச்சியத்தின் மெட்ரோ பத்திரிகை (ஒன்லைன், ட்ரவல் சஞ்சிகை - பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ்-ப்ரெஸ்டீஜஸ் ஊடகம் ஆகியவற்றைச் சேர்ந்த நான்கு சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்கள் இலங்கை சுற்றுலாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுக்காக ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பாவிலிருந்து வருகை தந்தனர்.

இந்திய ஊடகவியலாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயண வலைப்பதிவாளர்கள் வருகை (2022 ஜூலை)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று ரீதியான நட்புறவைக் கண்டறிவதற்கும், இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவளைத்து உள்நாட்டு சுற்றுலாத்துறைக்கு ஒத்துழைப்புச் செய்ய வைக்கும் நோக்கில் இந்தியாவைச் சேர்ந்த ஊடக மற்றும் சுற்றுலாப் பயணத்தில் தாக்கம் செலுத்தும் நபர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று 2022 ஜூலை 3ஆம் திகதி முதல் ஜூலை 11ஆம் திகதி வரை இலங்கைக்கு அழைக்கப்பட்டது. டெல்லி, மும்பாய், பூனே, கல்கத்தா, பங்களூர், ஹைதராபாத் உள்ளிட்ட இந்தியாவின் முன்னணி நகரங்கள் மற்றும் பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 8 பேர் இந்தக் குழுவில் உள்ளடங்கியிருந்தனர். லொக்மட் (அச்சு-நாளாந்தம்), டெய்லி சாகர் (மொழி-மராத்தி), இந்தியா ப்ளும்ஸ் நியூஸ் சேர்விஸ் (indiablooms.com), மும்பாய் மெசஞ்சர் (மொழி-ஹிந்தி), இந்தியா ட்ரிபியூன் (மொழி-ஆங்கிலம்), டெய்லி டோ பஜே டொபஹா (மொழி-ஹிந்தி) ஆகிய ஊடகங்களின் மூலமான பிரசாரத்தின் ஊடாக இந்தியா முழுவதிலும் உள்ள 104 மில்லியன் வாசகர்களைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.







உலக சுற்றுலா தினம், சர்வதேச ஊடகங்கள் மற்றும் தாக்கம் செத்துபவர்களுக்கு ஹபரணை மற்றும் கிழக்கு கரையோரத்தில் ஊக்குவிப்பு பிரசாரம்

இலங்கையில் (2022 செப்டெம்பர் 27) உலக சுற்றுலா தின கொண்டாட்டத்தை இலக்காகக் கொண்டு, கிழக்குப் பிரதேசத்தை முன்னிலைப்படுத்தி, உயர்மட்ட இந்திய.ஐரோப்பிய பயணத்தில் தாக்கம் செலுத்தும் குழுவொன்று (பிரான்ஸ், சிங்கப்பூர், இந்தோனேசியா, அமெரிக்கா, இந்தியா) இலங்கைக்கு அழைக்கப்பட்டது. வடமத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் எமது பிராந்திய சுற்றுலா சபைகளின் ஆதரவுடன் உலக சுற்றுலா தின கொண்டாட்ட நிகழ்வுகள் ஹபரணை மற்றும் அறுகம்பையில் முன்னெடுக்கப்பட்டன.





சர்வதேச ஊடக சந்தையில் (International Media MarketPlace (IMM) (வட அமெரிக்கா) சர்வதேச ஊடக வலையமைப்பு மற்றும் பங்காளர் ஊக்குவிப்பு 2022 ஜனவரி 26 மற்றும் 27ஆம் திகதி

2022 ஜனவரி 26 மற்றும் 27ஆம் திகதிகளில் வட அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச ஊடக சந்தையில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் பங்கேற்றிருந்ததுடன், இதில் 60ற்கும் அதிகமான ஊடக வெளியீட்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததுடன், ஏற்கனவே கிடைக்கப்பெற்ற 35 ஊடகக் கோரிக்கைகளும் காணப்படுகின்றன.







பிபிசி இன் சுற்றுலாப் பயண ஆசிரியர் ஆன் பனா

இந்த சர்வதேச பயண ஊடக வலையமைப்பு நிகழ்வில் பங்கேற்பதன் மூலம் உலகின் முன்னணி ஊடக வெளியீடுகள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்களை சந்திக்கும் வாய்ப்பை உருவாக்கியது என்பதுடன், இலங்கை சுற்றுலாவிற்கு ஆதரவளிப்பதற்கான நல்லுறவையும் ஏற்படுத்தியது. இந்தத் தொடர்பாடல் செயற்பாடானது நெருக்கடியான சூழ்நிலைகளின் போது இலங்கை சுற்றுலாப் பயணத்துக்கான இலக்கு என்ற வர்த்தகநாமத்தை மீள் உருவாக்குவதற்கான உத்தியாகச் செயற்பட்டது. இதன் உடனடி விளைவாக, பிபிசி பயணம், ஐக்கிய இராச்சியத்தின் ட்ரவில் வீக்லி, செலிங் ட்ரவல் யூகே உள்ளிட்ட பல்வேறு பதிப்பகங்கள் இலங்கை குறித்து சிறப்புக் கட்டுரைகளைப் பிரசுரித்திருந்தன.

சர்வதேச திரைப்பட சுற்றுலா ஊக்குவிப்பு

“அறும்கபே” சர்வதேச திரைப்பட படப்பிடிப்பு, 2022 மே

“அறுகம்பே” என்ற திரைப்படத்துக்கான படிப்பிடிப்பை இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் மேற்கொள்வதற்காக இஸ்ரேலிய திரைப்பட தயாரிப்பு நிறுவனமான “யுனைடட் சனல் மூவீஸ்” (UCM) நிறுவனத்தை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் அன்புடன் வரவேற்றது. 2022 மே 03ஆம் திகதி ஆரம்பமான படப்பிடிப்பு மே மாதம் 22ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தப் படப்பிடிப்பானது அறுகம்பை, கொழும்பு மற்றும் டெல் அவிவ் இஸ்ரேல் ஆகிய இடங்களில் இடம்பெற்றன. இந்தத் திரைப்படம் இஸ்ரேல் மற்றும் ஐரோப்பா முழுவதும் 50 நாடுகளில் திரையிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.





திரைப்படக்குழு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் வரவேற்கப்படுகிறது

திரைப்பட சுற்றுலா ஊக்குவிப்புப் பிரசாரத்தின் கீழ் 15ற்கும் மேற்பட்ட சர்வதேச தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், OTT நிகழ்ச்சிகள், சுற்றுலா ஆவணப்படங்கள் மற்றும் திரைப்படங்களை இலங்கையில் படப்பிடிப்பு மேற்கொள்வதற்கு இலங்கை சுற்றுலா உக்குவிப்புப் பணியகம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

பங்களூரில் நடைபெற்ற புத்தாக்கமான சர்வதேச திரைப்பட விழா (IIFF) மற்றும் மும்பையில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட மாநாட்டில் (IIFTC) இந்தியாவின் வடக்கு மற்றும் தெற்கு சினிமாத்துறையை இலக்காக்க கொண்டு நாடு சார்ந்த திரைப்பட ஊக்குவிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொலிவுட் (இந்தியா), கொலிவுட் (தமிழ்), டொலிவுட் (தெலுங்கு), சன்டல்வுட் (கன்னடா), மொலிவுட் (மலையாளம்) ஆகிய ஐந்து பாரிய சினிமாத்துறைகள் மற்றும் வளர்ந்துவரும் தொழில்துறைகளான பீகாரைத் தளமாகக் கொண்ட போஜ்பூரி திரைப்படத்துறை, மும்பாயைத் தளமாகக் கொண்ட மாராத்தி திரைப்படத்துறை, பெங்காலி சினிமா மற்றும் பஞ்சாப் பொழுதுபோக்குத்துறை ஆகியவற்றை உள்ளடக்கிய சினிமாத்துறைகளை இலக்காகக் கொண்டு இந்நாட்டை ஊக்குவிப்புச் செய்ய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துக்கு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் இலங்கையின் சர்வதேச திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் என்பன உதவி செய்தன.

பிரபல்யமான இலங்கைப் பாடகரும், இசைக் கலைஞருமான ஜொஹானி டி.சில்வா இந்திய திரைப்படை சுற்றுலா உக்குவிப்பில் இலங்கை சுற்றுலாத்துறைக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.





பயணத் தகவல் பீடங்கள்

TIC BIA

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணத் தகவல் பீடம்





விமான நிலையத்தில் உலக சுற்றுலா தினக் கொண்டாட்டம்









ஏரோ.ப்லொட், எயார் பிரான்ஸ், எல்ட்விஸ் மற்றும் அசுர் விமான சேவைகள் வரவேற்கப்பட்டன

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் மற்றும் ஏனைய தொழில்துறையினரால் வரவேற்கப்பட்ட ஏனைய குழுவினர்






கொழும்பு பயணத் தகவல் பீடம்

1912 அழைப்பு மையம் - கொழும்பு பயணத் தகவல் பீடம் வாரத்தில் 7 நாட்களும் 24 மணித்தியாலங்களும் செயற்படுவதுடன், பகல் வேளைகளில் விசாரணை அழைப்புக்கள் கையாளப்படுவதுடன், இரவு நேரங்களில் அழைப்புக்கள் திசைமாற்றல் மூலம் கையாளப்படும்.

கண்டி பயணத் தகவல் பீடம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் ஊடாக கண்டி ஸ்ரீதலதா மாளிகையிலான விசேட கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.





- பேராதனை தாவரவியல் பூங்காவில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியில் கலந்துகொண்டனர்
- மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றில் பார்வையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது.
- கொழும்பு துறைமுகத்தில் வைக்கிங் மார்ஸ் மற்றும் மெயின் ஷி.ப் 5 பயணிகள் கப்பல்களை வரவேற்க நடனக் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.





உள்நாட்டு ஊடகங்கள்

2022 டிசம்பர் 31ஆம் திகதிவரையில் 30 ஊடக அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன.






மாஸ்டர் ஹொக்கி உலகக்கிண்ணம் 2022 தொடர்பில் ஊடக சந்திப்பு நடத்தப்பட்டது (ஊடகப் பங்களிப்பு)





டீ மாதாந்த செய்தி மடல் தொழில்துறைக்கு வெளியிடப்பட்டது.



சுற்றுலாப் பயணம் தொடர்பான ஊடகங்களுடனான தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் எதிர்கால ஊக்குவிப்புக்கு ஒத்துழைப்புக்களைப் பெறும் நோக்கில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஊடக மன்றம் நடத்தப்பட்டது.







மத்திய கலாசார நிதியத்தினால் ஒதுக்கப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் விநியோகம்

நிறுவனம்	நாடுகள்	நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்	இந்தியா, பங்களாதேஷ், வியட்னாம், பொதுநலவாய சுயாதீன நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஏனைய ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஆசிய நாடுகள் ஸ்கன்டினேவியன் நாடுகள்	204
தொழில்துறை	அல்பேனியா, பெல்ஜியம், பிரேசில், பல்கேரியா, பிரான்ஸ், ஜோர்ஜியா, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், லட்வியா, ரஷ்யா மற்றும் இந்தியா	270
மொத்தம்		474

நிகழ்வுகள்

இந்தியா மற்றும் தென்காசிய துறவிகள் மற்றும் மதகுரு அல்லாத நபர்கள் இலங்கைக்கு விஜயம் - துறவிகள் மற்றும் மதகுருமார் அல்லாத 72 பேர் வருகை தந்ததுடன் 2022 இல் இது குறித்து வர்த்தகநாமப்படுத்தல் மற்றும் ஊடக வாய்ப்புக்கள் கிடைத்தன

இந்தியாவில் வாழும் பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் திபெத் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மதத் துறவிகள் மற்றும் மதகுருமார் அல்லதவர்கள் அடங்கிய குழுவொன்று 2022 ஜனவரி 08 முதல் 22 வரையில் விசேட சிவனொளிபாத யாத்திரைக்காக இலங்கை வந்ததுடன், இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளிலிருந்து வருகைதந்த இந்தக் குழுவினரை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றது.

நவம் பெரஹர

இலங்கையின் அதியுச்ச மத மற்றும் கலாசாப் பண்பாடுகளைப் பறைசாற்றும் வகையில் 2022 பெப்ரவரி 15ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெற்ற கொழும்பு கங்காராமை விகாரையின் கங்காராம நவம் பெரஹரவுக்கு வசதியேற்படுத்திக்கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வு பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டுப் பார்வையாளர்களை ஈர்த்திருந்தது.





இலங்கையின் அபிமானய நினைவுப் புத்தகம் 2022

இலங்கையின் தேசிய சுதந்திரத்தின் பின்னர் ஜனநாயக அரசியல் கட்சிகள் மற்றும் அதன் அரச தலைவர்கள் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்காக "ஸ்ரீலங்காபிமானய" நினைவுப் புத்தகத்தை வெளியிடுவதற்கு இலங்கை சுதந்திர ஊடக சங்கத்திற்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

புத்த ரஷ்மி சர்வதேச வெசாக் தின இதழ் 2022

ஒவ்வொரு வருடமும் வெசாக் தினத்துடன் இணைந்து கண்டியில் பௌத்த மற்றும் கலாசார அமைப்பினால் வெளியிடப்படும் "புத்த ரஷ்மி" சர்வதேச வெசாக் தின இதழில் பௌத்தம் பற்றிய கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், இது ஆர்வமுள்ள குழுக்களை இலக்குவைத்திருந்தது.

முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கு 2022

ஐக்கிய இராச்சியம், ஸ்பெயின் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து சுற்றுலாத்துறை தொடர்பான கல்வியியலாளர்கள் பேச்சாளர்களாகவும், சீனா, நெதர்லாந்து, சுவீடன், தாய்லாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கும் வகையில் இலங்கை ரஜரட்டை பல்கலக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த தேசிய மற்றும் சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கிற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.






2022 இல் இலங்கையின் 74வது சுதந்திரதின விழா

வர்த்தகநாமப்படுத்தல் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் பொதுமக்கள் மத்தியில் சுற்றுலா தொடர்பான தகவல்களைப் பரப்பும் நோக்கிலும் இங்கையின் 74வது சுதந்திர தினத்துக்கு இணையாக விசேட சுற்றுலா ஊக்குவிப்புக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

இலங்கை மஜிக் சேர்க்கிள் 2022

உறுப்பினர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றால் மாயாஜாலக் கலை கவனமாக வளர்க்கப்பட்டுவரும் சூழ்நிலையில் இலங்கை மஜிக் சேர்க்கிளின் 100வது வருடப் பூர்த்திக் கொண்டாட்டத்துக்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.





பேராதனை தாவரவியல் பூங்காவின் 200வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் 2022

தாவரவியல் பூங்காவின் வரலாறு குறித்த விழிப்புணர்வை உள்நாட்டு மற்றும் சர்வதேச விருந்தினர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தினால் திறந்த ஒருநாளை நடத்துவதன் மூலம் பேராதனையின் தாவரவியல் பூங்காவில் 200 ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கு வசதி செய்யப்பட்டது.





ஷேன் வோர்னுக்கு காலியில் அஞ்சலி

2022 ஜூன் 29ஆம் திகதி முதல் ஜூலை 03ஆம் திகதி வரை காலியில் நடைபெற்ற இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியை கிரிக்கெட் ஜாம்பவான் ஷேன் வோர்னுக்கு அர்ப்பணிக்க சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து இலங்கை கிரிக்கெட் நடவடிக்கை எடுத்திருந்தது. இலங்கை, அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட் அணி வீரர்கள், வர்ணனையாளர்கள், ஊடகக் குழுவினர், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உறுப்பினர்கள், சுற்றுலாத்துறை அமைச்சின் விசேட விருந்தினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் தூதுவராக சனத் ஜயசூரியவை நியமிக்கும் நிகழ்வு

இலங்கையின் தெற்காசியாவுக்கான தூதுவராக திரு.சனத் ஜயசூரிய அவர்களை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் நியமித்திருந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களை இலக்குவைத்து இது பற்றி அறிவிக்கும் ஊடக சந்திப்பு மற்றும் நியமனம் வழங்கும் நிகழ்வு 2022 ஓகஸ்ட் 04ஆம் திகதி சினமட் கிரான்ட் ஹோட்டலில் நடைபெற்றது.



கண்டி எசல பெரஹர 2022

யுனெஸ்கோவின் உலக மரபுரிமையாக அறிவிக்கப்பட்ட கண்டியில் வருடாந்தம் நடத்தப்படுகின்ற மிகவும் பழமையான கலாசார மற்றும் மத நிகழ்வான கண்டி எசல பெரஹரவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் 200,000ற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு நிகழ்வாக இது அமைகிறது. அது மாத்திரமன்றி உலகம் முழுவதிலுமுள்ள பக்தர்களுக்கு ஒன்லைன் மற்றும் டிஜிட்டல் தளங்களின் ஊடாகப் பார்ப்பதற்கான வசதியும் செய்துகொடுக்கப்பட்டது.







ஆசிய மத்திய வலய கடற்கரை கரப்பந்தாட்ட சர்வதேசச் சுற்றுப்போட்டி

கடற்கரை கரப்பந்தாட்டத்துறையில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கும், இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையிலும் வெளிநாட்டு விளையாட்டு வீரர்களின் பங்களிப்புடன் ஆசிய மத்திய வலய கடற்கரை கரப்பந்தாட்ட சர்வதேச சுற்றுப்போட்டியை நீர்கொழும்பில் நடத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

மகாராணியின் செய்தியைத் தாங்கிய கோலின் ஓட்டம் 2022

இங்கிலாந்தின் பேர்மிங்ஹமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவை முன்னிட்டு 2 ஆம் எலிஸபெத் மகாராணியின் செய்தியை தாங்கிய கோலை (Queen's Baton) 72 பொதுநலவாய நாடுகளுக்கு எடுத்துச் செல்லும் நிகழ்வுக்குக் காணப்படும் பாரிய ஊடக மதிப்பைக் கருத்தில் கொண்டு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் இதற்கான ஒத்துழைப்பை வழங்கியது. இந்த நிகழ்வானது இளைஞர்களை பொதுநலவாய மைய அரங்கில் கொண்டு செல்வதற்கும், உத்வேகம் தரக்கூடிய தனிப்பட்ட நபர்களின் கதைகளைக் கொண்டு செல்வதற்கும் சிறந்த வாய்ப்பாகும்.





ரெயிட் அமேசன்ஸ் 2022

பிரான்ஸில் இருந்து 600 ற்கும் அதிகமான பெண்களின் பங்குபற்றுதலுடன் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் கனெய்சன்ஸ் டி செய்லான் ஆகியன இணைந்து ரெயிட் அமேசன்ஸ் 2022ற்கு ஒத்துழைப்பு வழங்கின. இந்த நிகழ்வு சிகிரியா, ஹபரனை, கவுடுல்ல மற்றும் மெனராகலை ஆகிய இடங்களில் நடைபெற்றன. சுற்றுலாத் துறையில் உள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும், தொழில்துறையின் திறனைக் கவரும் மற்றும் மேம்படுத்தும் சக்திகளுக்கும் இந்த நிகழ்வு வாய்ப்புக்களையும், நன்மைகளையும் வழங்கியது.

இங்கிலாந்தில் நடைபெறும் 2022 உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்ற இலங்கை மாஸ்டர்ஸ் ஹொக்கி ஆண்கள் அணிக்கு ஆதரவு

இங்கிலாந்தின் நொட்டிங்ஹாமில் நடைபெற்ற இரண்டாவது மாஸ்டர்ஸ் ஹொக்கி உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை மாஸ்டர்ஸ் ஹொக்கி ஆண்கள் அணி பங்குபற்றியது. 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பிரிவு மற்றும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பிரிவுகளில் இலங்கை விளையாடியது. நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற கடினமான சூழ்நிலையிலும் முன்னாள் தேசிய வீரர்களைக் கொண்ட அணிகள் கடந்த ஒரு வருடமாக உலகக் கிண்ணப் போட்டிக்குத் தம்மைத் தயார்ப்படுத்தின.





5வது "ரேஸ் த பேர்ள்" போட்டி 2022

ஸ்பின்னர் நிறுவனத்தின் திரு.யசஸ் ஹேவகேயினால் ஏற்பாடு செய்யப்பட்ட 5வது ஷரேஸ் த பேர்ள்' போட்டிக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இந்த சைக்கிள் ஓட்டப் போட்டியானது நவம்பர் 5ஆம் திகதி 6.30 மணிக்கு பருத்தித்துறையில் ஆரம்பித்ததுடன் தெய்வேந்திரமுனை கலங்கரை விளக்கில் முடிவடைந்தது. 600 கிலோ மீற்றர் தூரத்தில் வவுனியா, தம்புள்ளை, பக்கமூன, மஹியங்கனை, வெல்லவாய ஆகிய இடங்களைக் கடந்து ஐவர் அடங்கிய சைக்கிள் ஓட்டக் குழுவானது 24 மணித்தியாலங்களில் இந்தப் போட்டியை நிறைவுசெய்தது.





∴பி.∴பா ரசிகர்கள் வலயம் நீர்கொழும்பு

∴பி.∴பா உலகக் கிண்ணம் என்பது மில்லியன் கணக்கான பார்வையாளர்களை ஈர்க்கும் பாரிய உலகக் கிண்ணப் போட்டியாகும். ∴பி.∴பா உலகக் கிண்ணம் 2022 காலப் பகுதியில் உலகக் கிண்ண ரசிகர்களை இலங்கைக்கு ஈர்ப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் அடையாளம் கண்டது. ∴பி.∴பா உலகக் கிண்ணம் 2022 உடன் இணைந்ததாக நீர்கொழும்பு கடற்கரைப் பகுதியில் 2022 டிசம்பர் 01ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நீர்கொழும்பு கடற்கரையில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிடவரும் விருந்தினர்களுக்கு உணவு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.





தாமரைக் கோபுரத்தில் கிறிஸ்மஸ் கொழும்பு 2022

சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டவர்களுக்கு கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலத்தை மகிழ்ச்சியாக அனுபவித்து மகிழ்வதற்கான வாய்ப்பை வழங்கவும், இலங்கையின் தனித்துவமான சுவையை வெளிப்படுத்தும் வகையிலும் தலைநகர் கொழும்பில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையை உயர்தர சுற்றுலாத் தலமாக நிலைநிறுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பண்டிகைக் காலத்தைக் கொண்டாடும் அதேநேரம், மக்களை ஈர்க்கக்கூடிய பரந்துபட்ட பகுதிகளை ஒரே இடத்தில் காட்சிப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமைந்தது. நிகழ்வு நடைபெற்ற பகுதியில் பெரும் திரளானவர்கள் கூடியிருந்ததுடன், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது என்பதையும் இந்நிகழ்வு காண்பித்திருந்தது.







ஜனாபதிபதி செயலகத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் கவர்ச்சி, வணிக சமூகங்களுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் சுற்றுலா இலக்கை மேம்படுத்தல், அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது போன்ற நோக்கங்களை இலக்காகக் கொண்டு 2022 டிசம்பர் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை ஜனாதிபதி செயலகத்தில் கிறிஸ்மஸ் நிகழ்வு நடைபெற்றது. அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்ததுடன், பல்வேறு தனியார் நிறுவனங்கள் அனுசரணை வழங்கியிருந்தன. இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் பங்கெடுத்திருந்தது.





கொழும்பு காலி முகத்திடலில் 31ஆம் திகதி இரவு நிகழ்வு

நாட்டில் கடந்த சில மாதங்களாக உருவாக்கப்பட்ட எதிர்மறையான விமர்சனங்களை எதிர்கொள்வதற்காக இலங்கை சுற்றுலாத்துறை பொதுமக்கள் பிரசாரங்களை செயற்படுத்தி வருகிறது. இதன் ஓர் அங்கமாக வருடத்தின் இறுதி தினத்தை கொண்டாடுவதற்கும், 2023ஆம் ஆண்டு அனைவருக்கும் சாதகமான நேர்மறையானாக இருக்க வேண்டும் என்பதை வரவேற்கும் நோக்கில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் கொழும்பு காலி முகத்திடலில் 2022 டிசம்பர் 31ஆம் திகதி நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டதுடன், பொழுதுபோக்கிற்கான மையமாக கொழும்பு மாறியிருந்தது. அத்துடன், கொழும்பு தாமரைத் தடாகம் குறித்து சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டது.





கீழ்வரும் நிகழ்வுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன

வேவ்ஸ் 2022, கொழும்பு ஸ்கோப், காலி உணவுத் திருவிழா 4வது தொகுப்பு, அல்ட்ரா எக்ஸ், தற்கால ஐந்திறன்போட்டி, அஹுங்கல காட்டுப் பகுதியில் கடற்கரை கரப்பந்தாட்ட முகாம், மிளகு சாகுபடி செய்யும் இடத்தில் சமையல், கொழும்பு உணவுத் திருவிழா, திஸ்ஸமஹாராம உணவுத் திருவிழா, எலக்ரிக் மாஸ்க் ∴பெஸ்டிவல், மிஸிஸ் டுவரிசம் 2022 மற்றும் மிஸ் டுவரிசம் பிளனட் 2022.

விளம்பரப்படுத்தல்


ஒரு தயாரிப்பு, சேவை அல்லது ஒரு காரணத்தை ஊக்குவிப்பதற்கான கால அளவுக்குப் பணத்தைச் செலுத்துவதை உள்ளடக்கிய தனித்துவமான மூலோபாய உத்தியே விளம்பரமாகும். ஒரு உற்பத்தியை, சேவையை அல்லது யோசனையை கட்டணம் செலுத்தப்பட்ட ஊக்குப்பின் மூலம் ஒருவர் அல்லது பலர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தச் செய்வதாக இதனைப் புரிந்துகொள்ளலாம். அச்சு, வானொலி, தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் ஊடகத் தளங்கள் போன்ற பல்வேறு ஊடகங்கள் மூலம் இவ்வாறான ஊக்குவிப்புக்களை மேற்கொள்ள முடியும். ஒரு திட்டத்தைக் கொள்வனவு செய்ய அல்லது அது தொடர்பான செயற்பாட்டை முன்னெடுக்கச் செய்ய ஒருவரை வற்புறுத்துவதே விளம்பரப்படுத்தலின் குறிக்கோளாகும்.

சமூக ஊடகங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்

சமூக ஊடகங்களை முகாமைத்துவம் செய்தல் குறித்த கண்ணோடம்

கடந்த வருடம் இலங்கையில ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையின் சுற்றுலாத்துறை குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது. சர்வதேச ஊடக அறிக்கைகளால் ஏற்பட்ட எதிர்மறையான பிரசாரங்களால் நாட்டின் சர்வதேச சுற்றுலா வர்த்தகநாமப்படுத்தல் மோசமான விளைவுகளைச் சந்தித்திருந்தது. இருந்தபோதும், இதனால் ஏற்பட்ட சிக்கல்களைத் தணிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் நிலைப்பாடுகளை மாற்றவும், அவர்களை இலங்கைக்கு வரவழைப்பதற்கும், உள்நாட்டு சுற்றுலாத்துறையைப் புதுப்பித்து டிஜிட்டல் ஊடகங்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் தனது டிஜிட்டல் ஊடக முகவராக ஈமார்க்கட்டிங்ஐ (eMarketingEye-EME) நிறுவனத்தை 2022 செப்டெம்பர் இல் நியமித்தது.


சமூக ஊடகப் பிரசாரங்கள், டிஜிட்டல் ரீதியாகக் கதைசொல்லுதல் மற்றும் தாக்கம் செலுத்துபவர்களுக்கான சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உத்திகளைக் முன்னெடுத்ததுடன், இதன் ஊடாக இலங்கை சுற்றுலாத்துறை பல்வேறு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் சென்றடைய முடிந்ததுடன், நாட்டின் இயற்கை அழகு, கலாசார பண்பாடு மற்றும் விருந்தோம்பல் போன்றவற்றை ஏனைய நாடுகளில் காட்சிப்படுத்த முடிந்தது. இதன் விளைவாக, நாடு சுற்றுலாப் பயணிகளின்



பிரசாரத்துக்கான காலவரிசை

2022ஆம் ஆண்டுக்கான சமூக ஊடக உத்திகள்

பயணிகளின் மனதில் இலங்கையைப் பற்றிய எதிர்மறையான கருத்தை மாற்றுவதில் அடிப்படையாகக் கவனம் செலுத்தும் அதேநேரம், 2022ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்கான சமூக ஊடக உத்திகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. நீண்டகால சந்தைகளிலிருந்தான குளிர்கால சுற்றுலாப் பயணிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் நிகழ்வுகள் மற்றும் இலங்கையில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு அப்பால் 2022 ∴. பி.∴பா உலகக் கிண்ண வலயம் மற்றும் கிறிஸ்மஸ் கொழும்பு போன்ற நிகழ்வுகளை இலக்குவைத்து இந்தியா மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சந்தைகளில் மூலோபாய பிரசாரங்களை முன்னெடுப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.





புதிய அலைவரிசைகளின் அறிமுகம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் முகப்புத்தகம், இன்டர்கிராம், டுவிட்டர் மற்றும் யூடியூப் போன்ற சமூக ஊடகங்களின் அடைவு எல்லைகள் 2022ஆம் ஆண்டில் விஸ்தரிக்கப்பட்டன. LinkedIn, TikTok மற்றும் ™வைநசநளவ போன்ற புதிய அலைவரிசைகளை செயற்படுத்தத் தொடங்கியதன் ஊடாக இந்த சமூகத் தளங்களில் உள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் திட்டமிட்டது. பிரபலமான இந்தப் புதிய தளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு வரக்கூடிய பரந்த அளவிலான சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்க முடியும் என்றும், நாட்டின் தனித்துவமான சலுகைகளை வெளிப்படுத்தி சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் எதிர்பார்க்கிறது.

மூலோபாயப் பிரசாரங்கள்

உறுதியான ஸ்ரீலங்கா - புலனுணர்வைக் கட்டியெழுப்பும் பிரசாரம்

பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இலங்கையை நோக்கிப் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளின் எதிர்மறையான எண்ணத்தை குறைக்கும் வகையில், நேர்மறையான உள்ளடக்கத்தை உருவாக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும் நாட்டின் சுற்றுலாத்துறை சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியது.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் அழகை காட்சிப்படுத்தவும், சாத்தியமான விருந்தினர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தவும், சாத்தியமான பார்வையாளர்கள் மீது நம்பிக்கையை வளர்ப்பதற்கு ஈர்க்கக்கூடிய உள்ளடக்கத்தை உருவாக்க உள்நாடு மற்றும் சர்வதேசத்தைச் சேர்ந்த செல்வாக்குச் செலுத்தும் நபர்கள் பட்டியலிடப்பட்டனர்.

சுற்றுலாப் பயணிகள் உண்மையான, நம்பகமான அனுபவங்களைப் பெற்றுக் கொண்டமையால் இந்த அணுகுமுறை இலங்கையை நோக்கிய எதிர்மறையான நிலைப்பாட்டை மாற்றுவதற்கு ஆதரவளித்தது. இந்த சமூக ஊடக உள்ளடக்கங்கள் விருந்தினர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதிலும் இலங்கையின் சுற்றுலாத் துறையை மீண்டும் உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகித்தன. விருந்தினர்களை ஈர்க்கும் மற்றும் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்குமான முயற்சிகளில் இந்த மூலோபாயம் தொடர்ந்தும் முக்கிய ஒரு அங்கமாகக் காணப்படும்.

முன்னணியான பயண அங்கீகாரங்கள் மற்றும் வலைப்பதிவுகளில் இலங்கை உயர்வான இடத்தில் பட்டியலிடப்படுவதற்கும், நட்பான மற்றும் பாதுகாப்பான இடம் என்ற அதன் நற்பெயரை எடுத்துக்காட்டும் வகையிலும் இந்த சமூக ஊடக உள்ளடக்கங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த உள்ளடக்கங்கள் இலங்கையைப் பற்றிய உறுதியான உணர்வை மேலும் மேம்படுத்துவதற்கும், பயணம் செய்ய வேண்டிய சிறந்த இடம் இது என்பதையும் நிலைநிறுத்துவதற்கு உதவியாக அமைந்தன.

ஸ்ரீலங்காவில் சூரிய ஒளி - குளிர்கால சந்தைக்கான பிரசாரம்

குளிர்காலம் தோன்றும்போது உலகில் உள்ள குளிர்கால சந்தையை இலக்குவைத்து அங்குள்ள விருந்தினர்களை ஈர்ப்பதற்கும், அவர்களின் வருகையைத் தூண்டுவதற்கும் படங்கள், படவிளக்கங்கள் மற்றும் விளம்பர உரைகள் ஆகியவற்றின் ஊடாக இலங்கை எப்பொழுதும் சூரிய ஒளியைக் கொண்ட மற்றும் வெப்பமண்டலத்தின் வசீகரத்தைக் கொண்ட நாடு என்பதை தனிப்பயனாக்கப்பட்ட உள்ளடக்கங்கள் மூலம் எடுத்துக் காண்பித்தல்.

புவிசார்ந்த முன்னணி சந்தைகள்

ஐக்கிய அமெரிக்கா ’ ஐக்கிய இராச்சியம் ’ சுவீடன் ’ நோர்வே ’ ஜேர்மனி ’ பிரான்ஸ் ’ பின்லாந்து ’ டென்மார்க்

ஸ்ரீலங்காவுக்கு ஆய்வுப்பணயம் - இந்திய சந்தைக்கான பிரசாரம்

இலங்கைக்கான சிறந்த மூன்று சுற்றுலாச் சந்தைகளில் ஒன்றாகத் திகழும் இந்திய சந்தையை இலக்காகக் கொண்டும், அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும் பிரத்தியோகமான சமூக ஊடகப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் 2023ஆம் ஆண்டில் இலங்கை 1.55 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரமிக்க வைக்கும் இலங்கையின் இயற்கை அழகு, செழுமையான கலாச்சார பாரம்பரியம் மற்றும் இங்கு கிடைக்கக் கூடிய பல்வேறு அனுபவங்களை வெளிப்படுத்தி இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது இந்தப் பிரசாரத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் தனித்துவமான சலுகைகளை எடுத்துரைப்பதன் மூலம் மறக்க முடியாத விடுமுறையை விரும்பும் இந்திய சுற்றுலாப் பயணிகள் கட்டாயம் செல்ல வேண்டிய இடம் இலங்கை என்பதை நிலைநிறுத்துவது இந்தப் பிரசாரத்தின் குறிக்கோளாகும். இந்தியாவைச் சேர்ந்த செல்வாக்குச் செலுத்துபவர்கள் மற்றும் ஏனைய ஒத்துழைக்கும் நபர்களுடன் இணைந்து இலங்கையின் சுற்றுலாத்துறையை இந்தியாவில் உள்ள விருந்தினர்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கும், இலங்கையின் அழகு மற்றும் அதன் பன்முகத்தன்மையை தொடர்புபடுத்தி அவர்களை ஈர்க்கக்கூடிய வெளிப்படுத்தல்களை முன்வைப்பதற்கும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தால் முந்தது. இந்திய சுற்றுலாப் பயணிகள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாக இலங்கையை நிலைநிறுத்தவும், ஒட்டுமொத்த சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கும் இந்த முயற்சி உதவியது.

ஸ்ரீலங்காவில் பண்டிகை - பண்டிகைகால பிரசாரம்


சவால்கள் காணப்பட்டாலும் 2023 இல் விருந்தினர்களை வரவேற்பதற்கு இலங்கை தனது தயார்நிலையைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. இதனை முன்னெடுக்கும் நோக்கில் நீர்கொழும்பு ∴பி.∴பா வலயம் மற்றும் கொழும்பு கிறிஸ்மஸ் ஆகிய நிகழ்வுகளை இவ்வருட இறுதியில் ஏற்பாடு செய்திருந்தது. 2023 இல் பயணிகளை வரவேற்க இலங்கையின் தயார்நிலையை வெளிப்படுத்தும் வகையில் இந்த நிகழ்வுகளை சமூக ஊடகங்கள் பயன்படுத்தின. சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சியின் மூலம், இலங்கை அதன் தனித்துவமான கலாச்சாரம், உணவு மற்றும் விருந்தோம்பல் போன்ற விருத்தினர்கள் விஜயம் செய்வதற்குத் தேவையான காரணிகள் முன்னிலைப்படுத்தப்பட்டன. உதைபந்தாட்ட ரசிகர்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட சமூக ஊடக பிரச்சாரத்தின் மூலம் கட்டாரில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் பயணிகளை ஈர்க்கும் வகையில் ∴பி.∴பா வலயம் திரையிடல் வடிவமைக்கப்பட்டிருந்தது. ∴பி.∴பா உலகக் கிண்ணம் போன்ற சூழலை உருவாக்கி முன்னெடுக்கப்பட்ட பிரசாரம் பிரேசில் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்தான ஆர்வத்தையும் தூண்டின. நாட்டின் தனித்துவமான கலாசாரம் மற்றும் விருந்தோம்பலை அனுபவிக்கும் நோக்கிலான இலங்கைக்கான விஜயம் மற்றும் தங்குமிட பொதிகள் குறித்த ஆர்வத்தை இந்த சமூக ஊடகப் பிரசாரங்கள் உருவாக்கியிருந்தன.


புதிய அலைவரிசைகளுக்கான அறிமுகம்

தொற்றுநோயால் உருவான சவால்கள் காணப்பட்டாலும், 2021 ஆம் ஆண்டில் நமது சுற்றுலாத் துறையானது மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியுள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம். சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது 120 மில்லியனுக்கும் அதிகமான பதிவுகள், 1.8 மில்லியன் ஈடுபாடுகள், 580,000ற்கும் அதிகமான பின்தொடருனர்களைப் பெற்று தனது சமூக ஊடக அலைவரிசைகளில் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.



பொருளாதார நெருக்கடியின் போது தொலைக்காட்சி விளம்பரத்துடன் கூடிய ஊடகப்பிரசாரம் தற்பொழுது இடைநிறுத்தப்பட்டிருப்பதுடன், ஷஇலங்கைக்கு விஜயம்செய்யுங்கள்' என்ற ரீ-ஷேர்ட் வர்த்தகநாமப்படுத்தல் பிரசாரம், ஷசோ ஸ்ரீலங்கா' வர்த்தகநாமப்படுத்தல் பிரசாரம் நிகழ்வுக்கான முகாமைத்துவத்துக்கான நிறுவனம் நியமிக்கப்பட்டு அதற்கான த்தை நியமித்தல், போக்குவரத்து மற்றும் அகற்றுதல் போன்றவை முன்னெடுக்கப்பட்டன. விமான நிலையத்தின் வருகைக்கான வாகனத் தரிப்பிடத்தில் வர்த்தகநாமப்படுத்தல் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.


LEVERAGING
NEW PLATFORMS
& CREATIVES
4 PLACES
TO ADD TO YOUR
ELLA
BUCKET LIST
ARUGAM BAY
DUSKY
SRI LANKAN
Skies
LEVERAGED THE RISE OF SHORT FORM
VIDEO CONTENT & VERTICAL MEDIA
Traveler
Sri Lanka ranks among the top 20
best places to visit
INFORMATIVE & NEWS BASED ACCREDITATIONS WERE POSITIONED
IN PROFESSIONAL MEDIA TO DRIVE CONFIDENCE




இலங்கை சுற்றுலாவின் இணையத்தள அங்குரார்ப்பணம் மற்றும் இணையப் பிரசாரம்

www.srilanka.travel web site home page changes.

இலங்கை சுற்றுலாவின் ஏற்பிசைவுப் பக்கத்தின் புதுப்பிப்பு - 2022 ஏற்பிசைவு

விஜயம் செய்வதற்கு உரிய சிறந்த 20 இடங்களில் ஒன்றாக இலங்கை தரவரிசை

உலகிலுள்ள சிறந்த 10 நாட்பான நாடுகளில் ஒன்றாக இலங்கை தரவரிசை : கண்டே நாஸ்ட் பயணர்கள் சஞ்சிகையினால் 2022ற்கான வாசர்களின் தெரிவு விருது




www.srilanka.travel
இணையத்தளம் இலங்கை சுற்றுலா செய்திகளின் தரவேற்றம்

(மிஸ் இன்டர்நஷனல் யூகே நிகழ்வை நடத்தும் இலங்கை சுற்றுலா, ரஷ்யா மற்றும் உக்ரெய்ன் வர்த்தக அறியப்படுத்தல் சுற்றுலா குழுவை இலங்கை சுற்றுலா வரவேற்றது, கோல்பேஸ் கோட்டலுடன் இணைந்து இலங்கை மணப்பெண் சஞ்சிகை ஷ வெடிங் வீக் 2022" நிகழ்வு ஏற்பாடு, ஆரோக்கிய சுற்றுலாவை மேம்படுத்த இலங்கை சுற்றுலாவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு, இந்தியாவின் டெல்லி கிரேட்ட நொய்டாவில் நடைபெற்ற இந்திய எக்ஸ்போ மார்ட் 2022- தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா பரிமாற்றத்தில் இலங்கை பங்கேற்பு, ஷமுருகன் பாதையின்' மூலம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கலாச்சார மற்றும் வரலாற்று உறவுகளை மேம்படுத்துதல் போன்று 25ற்கும் அதிகமான செய்திகள் தரவேற்றப்பட்டன)

இலங்கையின் பொதுவான மற்றும் கலாசார நிகழ்வுகளின் புதுப்பிப்புக்கள் மற்றும் பிரசாரங்கள்

	நிகழ்வுகளின் தகவல்கள்
1	டுருது பெரஹர - களனி ரஜமகா விகாரை
2	நவம் பெரஹர - கங்காராம விகாரை
3	சுதந்திர தினம்
4	சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வெசாக் கொண்டாட்டம்
6	பொசன் திருவிழா
7	கதிர்காமம் எசல திருவிழா - கதிர்காமம் ஆலயம்
8	வாத்துவ பொசன் பெரஹர - ஸ்ரீ சமுத்திரம் விகாரை
9	கண்டி எசல திருவிழா - புனித தந்தத்தைக் கொண்ட ஆலயம்
10	நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா



எக்ஸ்போ 2020 டுபாய்

முதல் முதலாவது எக்ஸ்போ நிகழ்வு 1851ஆம் ஆண்டு நடத்தப்பட்டதுடன், "பாரிய கண்காட்சி" என இது அழைக்கப்பட்டது. 1931ஆம் ஆண்டுக்கு அமைய இந்த எக்ஸ்போ நிகழ்வை சர்வதேச காண்காட்சிகளின் பணியகம் மேற்பார்வை செய்து ஒழுங்கமைத்தது. உலகக் கண்காட்சி என்பது நாடுகளை இணைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு உலகளாவிய நிகழ்வாகும். உலகெங்கிலும் உள்ள நாடுகள் தங்கள் சமீபத்திய கண்டுபிடிப்புகளைக் காண்பிக்கும் ஒரு தளமாகும்.

எக்ஸ்போ 2020 டுபாயில் இலங்கை

நாட்டின் உலகளாவிய நிலையை உயர்த்தவும், நாட்டின் உயர்தர சலுகைகளை உலகிற்கு வெளிப்படுத்தவும், நாட்டை வளைகுடா பிராந்தியத்துடன் இணைக்கும் நோக்குடனும் இலங்கை எக்ஸ்போ டுபாய் நிகழ்வில் பங்கேற்றது. விருந்தோம்பல், அமைதி மற்றும் கலசாரம் ஆகியவற்றில் சிறந்த அனுபவத்தைப் பெற்றிடுங்கள் என்பதே எக்ஸ்போ 2020 டுபாயில் இலங்கை காட்சி அரங்கத்தின் பிரதான செய்தியாக இருந்ததுடன், ஒரு மாதத்திற்கு 20,000 இற்கும் மேற்பட்ட விருந்தினர்களை நாங்கள் மகிழ்வித்து, அவர்களுக்கு விருந்தளித்திருப்பதுடன், உலகிலிருந்த வரும் விருந்தினர்களுக்கு எமது தீர்வு சொர்க்கம் நிறைந்த சுற்றுலா தலமாக மேம்படுத்துகின்றோம் என்ற தகவலும் வழங்கப்பட்டது. வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான பிரிவுப் பகுதியில் 300 சதுர மீட்டர் பரப்பளவில் இலங்கையின் காட்சி அரங்கம் அமைந்திருந்ததுடன், நம்பகத்தன்மை, சுருக்கம் மற்றும் பன்முகத்தன்மை ஆகிய மூன்று தூண்களை அடிப்படையாகக் கொண்டு இது அமைக்கப்பட்டிருந்தது.





- 2021 ஒக்டோபர் 01ஆம் திகதி முதல் 2022 மார்ச் 31ஆம் திகதி வரை உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து 128,022 விருந்தினர்களை அழைத்துவருவதற்கு எக்ஸ்போ 2020 இல் இலங்கையின் காட்சி அரங்கம் பங்களித்துள்ளது.
- 2021 ஒக்டோபர் 1ஆம் திகதியில் ஆரம்பித்து 2022 மார்ச் 31ஆம் திகதி வரையில் எக்ஸ்போ 2020 இல் பெற்ற மொத்த பொதுமக்கள் தொடர்பு ஏறத்தாழ 2,791,351.18 அமெரிக்க டொலர்கள் ஆகும். 837,40,354 ரூபா பெறுமதியான இலவச பிரசாரம் கிடைத்தது. விஎ.ப்எஸ் குளோபல் பிஆர் நிறுவத்துடன் ஏற்படுத்தப்பட்ட மூலோபாயக் கூட்டாண்மையின் பலனாக இது கிடைத்தது.
- இலங்கை சுற்றுலா உக்குவிப்புப் பணியகம் காட்சிப்படுத்திய இலங்கையின் சிறந்த திறமைகளை 5000 இற்கும் அதிகமானவர்கள் உலகப் பார்வையாளர்கள் நேரடியாகவும், 10,000 விருந்தினர்கள் ஒன்லைனிலும் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.
- ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற வியாபாரங்களுக்கு இடையிலான வியாபார சந்திப்புக்களில் 50 பயண மற்றும் சுற்றுலாவுடன் தொடர்புபட்ட முகவரமைப்புக்கள் பங்கெடுத்தன.
- இலங்கையின்க தந்திர தினக் கொண்டாட்டம் எக்ஸ்போவில் அதிகம் பேசப்பட்ட நிகழ்ச்சியாக அமைந்தது. தொற்றுநோய் காலப்பகுதியில் அல்வசல் கவிகைமாடம் எமது கலாசார நிகழ்வுகளை நடத்துவதில் பங்களிப்புச் செலுத்தியது என்பதுடன், சுற்றுலா தொடர்பில் நாம் நடத்திய ஊடக சந்திப்பில் 52 ஊடக நிறுவனங்கள் நேரடியாகவும், ஒன்லைன் ஊடாகவும் இணைந்திருந்ததுடன், அல்வசல் தேசிய தின நிகழ்வில் தேசியக் கொடி உயரப்பறந்தது.
- எக்ஸ்போ 2020 இல் வருகை தந்த விருந்தினர்களுக்கு இலவசமாக ஒரு கோப்பை பிளேன் டீ வழங்கப்பட்டதுடன், குறித்த கண்காட்சியில் சிறந்த விருந்தோம்பலைக் கொண்ட காட்சி அரங்கமாக இது கருதப்பட்டது. 86,000ற்கும் அதிகமான தேனீர் கோப்பைகள் மாதிரியாக வழங்கப்பட்டன.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் பிரதமர் அதிமேதகு ஷேக் மொஹமட் பின் ரஷிட் அல் மக்தூம், ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளிவிவகார மற்றும் சர்வதே ஒத்துழைப்பு அமைச்சர் அதிமேதகு ஷேக் அப்துல்லா பின் செய்ட் அல் நஹ்யன், அதிமேதகு ஷேக்கா மஹ்ரா பின்த் முகமது பின் ரஷித் அல் மக்தூம், ரஸ் அல் கைமாவின் அதிமேதகு இளவரசி அரி.ப., மாண்புமிகு அமைச்சர் அலெக்ஸி க்ரூஸ்தேவ், ரஷ்யாவின் தொழிற்சாலை மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர் மற்றும் மகாராணியின் செய்தியைக் கொண்ட கோலைத் தாங்கிய குழுவினர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களை வரவேற்ற காட்சி அரங்கங்களில் ஒன்றாக இலங்கைக் காட்சி அரங்கம் அமைந்தது.
- உலகத்தைச் சேர்ந்த விருந்தினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளைக் கொண்டிருந்த சில அரங்குகளில் இதுவும் ஒன்று. எங்கள் சொர்க்கமான தீவுக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 24 விமான டிக்கட்டுக்களை இலவசமாக வழங்கியது.
- யோஹானி தனது நண்பர்களான ஆல்ஸ்டன் கோச், தெஹானி இமாரா ஆகியோருடன் நடத்திய நேரடி இசை நிகழ்ச்சி ஐக்கிய அரபு அமீரகத்தின் இசை உணர்வுகளுக்கு விருந்தளித்திருந்ததுடன், 14 வயதுடைய தினு டுபாய் மிலேனியம் அம்.ப அரங்கில் அதிக ரசிகர்களை ஈர்த்திருந்தார். ஏறத்தாழ 3200ற்கும் அதிகமானவர்கள் நேரடியாக இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்ததுடன், 5000ற்கும் அதிகமானவர்கள் மெய்நிகரான முறையில் இந்நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர்.
- முகப்பத்தகம் - ஆறுமாத காலப்பகுதியில் 57,806 லைக்ஸ் பெற்றுக்கொண்டதுடன், வாராந்த அடிப்படையில் இது புதுப்பிக்கப்பட்டது, இந்தப் பதிவுகளில் காணப்பட்ட படங்கள் மற்றும் வீடியோக்களுக்கு மொத்தமாக 19,163 லைக்ஸ் பெறப்பட்டிருப்பதுடன், 4810 பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்டர்கிராமில் 11,846 பின்தொடருனர்களைப் பெறமுடிந்ததுடன், 10,323 இடுகைகளுக்கான லைக்ஸ் கிடைக்கப்பெற்றுள்ளன.
- பிரம்பிலான கைவேலை, பற்றிக், பொம்மைகள், நாணல் புல் கைவேலைகள், உருவமொம்மைகள், சிற்பங்கள், பித்தளை வேலைகள், லேஸ் வேலைப்பாடுகள், முகம்மூடி தயாரிப்பு, இலங்கையின் கலை மற்றும் மரவேலைப்பாடுகள் போன்ற துறைகளில் தலைசிறந்த கைவினைஞர்கள் தமது திறனை வெளிப்படுத்தியதுடன், பார்வையாளர்களை ஈர்ப்பதிலும் முக்கிய பங்காற்றினர்.
- இலங்கை காட்சி அரங்கமானது பறை விழா, பாடல் நடனம் மற்றும் நாடக நிகழ்ச்சி, இலங்கையின் பாரம்பரிய நடனங்கள், .ப்யூஷன் நடனங்கள், கலாச்சார நிகழ்ச்சி, திருமண நிகழ்ச்சி மற்றும் பற்றிக் பஷன் ஷோ ஆகியவற்றை ஏற்பாடு செய்து, எக்ஸ்போவில் பார்வையாளர்களை மகிழ்வித்து அதனை உலகளாவிய ரீதியில் கொண்டு சென்றது.
- டிசம்பர் மாதத்தில் கிறிஸ்மஸ் கரோல் மற்றும் முழுமதி வட்டத்தில் புத்தக வாசிப்பு போன்ற நிகழ்வுகள் சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கில் இலங்கை காட்சி அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

- வினாவிடைப் போட்டி மற்றும் எமது பின்னணியில் படம்பிடித்தல் போன்ற நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்களுக்கு துண்டுப்பிரசுரங்கள், ரீ-ஷேர்ட், தொப்பிகள் மற்றும் பேய் முகம்மூடிகளைக் கொண்ட கீ டக்ஸ் என்பன பரிசுகளாக வழங்கப்பட்டன.
- இந்த எக்ஸ்போ நிகழ்வின் ஆறு மாதங்களில் ச.்ப்பையார் தினம் மற்றுமொரு வெற்றிகரமான நிகழ்வாக அமைந்தது. 150,000,000 அமெரிக்க டொலருக்கும் அதிகமான நீலமாணிக்கம் அல்லது ச.்ப்பையார்களை இலங்கை காட்சிப்படுத்தியது, #dayofsapphires என்பது டுபாய் எக்ஸ்போ 2020 இல் ட்ரெண்டிங்காகக் காணப்பட்டது.
- ஒவ்வொரு வாரமும் 2 நிறுவனங்களுடன் இலங்கையைச் சேர்ந்த மாணிக்கக் கல் வியாபாரிகள் தங்கள் தயாரிப்புகளை டிசம்பர் மாதத்தில் காட்சி அரங்கில் காட்சிப்படுத்தியிருந்தனர். வாராந்தம் குலுக்கல்கள் நடத்தப்பட்ட ஆபரணங்கள் பரிசாக வழங்கப்பட்டன.
- சில்லறை விற்பனைக் கூடம், தேயிலைக் கூடம், மாணிக்கக்கல் வியாபாரம் மற்றும் தேசிய கைவினை கவுன்சில் என்பன மொத்தமாக மேற்கொண்ட விற்பனைகள் மூலம் 85,000 அரபு அமீரக திராம்களை ஈட்டியிருந்தன.
- தகவல் கருமபீடம் அவ்வப்போது பயண முகவர்களை நிர்வகித்து சிறிது நேரம் காட்சி அரங்கைப் பார்வையிட்டனர். அவர்களில் குறிப்பிட்ட சிலரால் விடுமுறைக்கான முன்பதிவுகளைப் பெறமுடிந்தது.



இறுதி கணக்கு
2022

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

நிதி நிலை அறிக்கை 2022 டிசம்பர் 31ஆம் திகதி உடன் முடிவடையும் ஆண்டிற்கு

	பைலமய	2022.12.31(ரூபா)	2021.12.31 மீள ஆவணப்படுத்தப்பட்ட
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள்	3	1,479,617,993	564,082,296
குறகிய கால முதலீடுகள்		4,800,000,000	3,600,000,000
கிடைக்க வேண்டிய நிதி	4	869,200,952	612,915,265
முற்பணங்கள்	5	46,494,249	59,929,852
முற்கொடுப்பனவுகள்	6	8,235,111	12,772,315
ஊழியர்களுக்கான கடன்கள்	7	13,065,939	11,929,422
பொருள் இருப்புக்கள்		28,982,077	26,009,985
மொத்த நடைமுறைச் சொத்து		**7,245,596,321**	**4,887,639,135**
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்			
சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உகரணங்கள்	8	32,640,538	47,303,981
தொட்டுநர முடியாத சொத்துக்கள்			
கணணி மென்பொருள்		1,713,023	2,349,160
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		**34,353,561**	**49,653,141**
மொத்த சொத்துக்கள்		**7,279,949,882**	**4,937,292,276**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
முற்பணமாகக் கிடைத்த நிதியம்	9	7,421,521	2,511,500
செலுத்த வேண்டிய வைப்புக்கள்	10	3,159,228	3,224,871
ஊழியர் பிரதிலாபம்	11	1,762,245	1,650,125
திரண்ட செலவினம் மற்றும் கடன்படுனர்	12	136,717,456	178,920,749
புத்தகத்தின் அடிப்படையில் நிதி -தலைமையகம் - பிரதான கணக்கு			67,021,765
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**149,060,450**	**253,329,010**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
வாகன குத்தகை		2,880,930	6,426,590
மொத்தப் பொறுப்புக்கள்		**151,941,380**	**259,755,599**
தேறிய சொத்துக்கள்		**7,128,008,502**	**4,677,536,677**
தேறிய சொத்து ∴ பங்குரிமை			
மூலதனப் பங்களிப்பு		33,069,157	33,069,157
திரண்ட மிகை ∴ (பற்றாக்குரை)		7,094,939,345	4,644,467,520
மறுமதிப்பீட்டு இருப்பு			
மொத்த தேறிய சொத்து ∴ பங்குரிமை		**7,128,008,502**	**4,677,536,677**

நிதி அறிக்கை தரநிலைகள், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் இலங்கையின் தேவைகளுக்கு ஏற்ப இலங்கை சுற்றுலாச்"

பணிப்பாளர் நிதி
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

இந்நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியதாகும். இந்நிதி வெளிப்பாடுகள் பணிப்பாளர் சபையினால். ஆம் திகதி அங்கீரிக்கப்பட்டது.

சாலக கஜபாகு
தலைவர்
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

கே.பி.பி.சிறிவர்தன
முகாமைத்துவப் பணிப்பாளர்
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

சபை உறுப்பினர்
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

சபை உறுப்பினர்
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்

